# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க,
# சுங்கம் (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை : ரூபா 4.20 தபாற் செலவு : ரூபா 2.30

# 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஓ 7/87
1871

**சுங்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

235 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு முறையே "இருநூறு ரூபாவை" அல்லது "ஆயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"வருகை மணித்தியாலங்களை அமைச்சர் தீர்மானித்தல்.

6. (1) சுங்க அலுவலர்களினதும் சுங்கச் சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேறு ஆட்களினதும், தகுந்த அலுவலகங்களிலும், ஊழிய இடங்களிலும் அவர்களின் பொது வருகை மணித்தியாலங்களையும், விசேட வருகை மணித்தியாலங்களையும் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சர் தீர்மானித்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) பிரதான சேகரிப்பாளர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சுங்க அலுவலர்களினதும் அத்தகைய வேறு ஆட்களினதும் தகுந்த அலுவலகங்களையும் ஊழிய இடங்களையும் தீர்மானித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான குறித்துரைக்கப்பட்ட ஒரு துறைமுகத்தினுள் அல்லது விமான நிலையமொன்றினுள் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுங்க அலுவலர்களினதும் அத்தகைய வேறு ஆட்களினதும் தகுந்த அலுவலகங்களும் ஊழிய இடங்களும், அத்தகைய துறைமுகத்திற்கு அல்லது விமான நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியின் ஒருப்பாட்டுடன் பிரதான சேகரிப்பாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.".

2—டீ 002339—4,520 (12/88)

முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ, 6ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 6அ, 6ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"விசேட சேவைக்கான அல்லது வருகைக்கான கொடுப்பனவு.

6அ. (அ) அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான ஒரு விசேட சேவையெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் சேவை ; அல்லது

(ஆ) அவரது தருந்த அலுவலகம் அல்லது ஊழிய இடம் தவிர்ந்த ஏதேனும் அலுவலகத்தில் அல்லது இடத்தில்,

எவரேனும் சுங்க அலுவலரின் வருகை தருகை எவரேனும் ஆளுக்கு தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய அலுவலர், விடயத்திற்கேற்ப அத்தகைய சேவைக்கு அல்லது வருகைக்குப் பிரதான சேகரிப்பாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அத்தகைய ஆளினால் பிரதம சுங்கச் சேகரிப்பாளருக்கு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

"சுங்க அலுவலர்களுக்கு இடவசதியையும் தங்கிடத்தையும் ஆட்கள் வழங்குதல்.

6ஆ. வேறு ஏதேனும் சட்டத்திலுள்ள எது எப்படியிருப்பினும், சுங்க அலுவலர்களின் பயன்பாட்டிற்காக விடயத்துக்கேற்ப, துறைமுகத்தில், விமான நிலையத்தில், குதத்தில் அல்லது இடத்தின் பொருத்தமான தங்கிடத்தையும் இடவசதியையும் ஏற்பாடு செய்தல், சுங்க அலுவலர்களின் அல்லது சுங்கச் சேவையில் ஊழியத்திலமர்த்தப்பட்ட எவரேனும் ஆளின் வருகை அல்லது சேவைகள் தேவையாகின்ற ஏதேனும் துறைமுகத்தின் அல்லது விமான நிலையத்தின் ஒவ்வோர் அதிகாரியினதும் அல்லது ஏதேனும் பொறுப்பாகவுள்ள ஒவ்வோர் ஆளினதும் கடமையாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் " ஆயிரம் ரூபாவை " என்னும் சொற்களுக்குப் பதிலாக " இருபத்தையாயிரம் ரூபாவை " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"முரணான கூற்றை அளிக்கின்ற சாட்சி தொடர்பில் நீதிபதி எவ்வாறு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது.

8அ (1) இக்கட்டளைச் சட்டத்தின்கீழான தவறொன்றிற்கான விளக்கமொன்று நடைபெறும்போது, எவரேனும் சாட்சி, இக்கட்டளைச் சட்டத்தின்கீழான அத்தகைய தவறை ஏதேனும் புலனாய்வு செய்யும்போது 8 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் சுங்க அலுவலரின், ஆளின் முன்னிலையில், அவரினால்

முன்னர் செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்ட ஒரு கூற்றை வெளிப்படையாகவோ அல்லது அவசியமான உட்கிடை மூலமாகவோ முக்கியமான ஏதேனும் விடயத்தின்மீது முரண்பாடு செய்யின் தலைமைதாங்கும் நீதிபதி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பானதெனவும் நியாயமானதெனவும் அவர் கருதினால் பின்வருவனவற்றைச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) புலனாய்வின்போது சாட்சியினால் தரப்பட்ட கூற்று தனியான மூலமொன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற சான்றினால் முக்கிய விபரங்களில் ஒப்புறுதிப்படுத்தப்பட்டிருப்பின் அத்தகைய கூற்றின்மீது செயலாற்றுதல்; அத்துடன்

(ஆ) ஒரு நீதிமுறையான வழக்கு நடவடிக்கையின் ஒரு கட்டத்தில் பொய்யான சான்றை வேண்டுமென்றே தந்தமைக்காக, அத்தகைய நீதிமன்றப் பதிவாளரினால் தயாரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்ட குற்றப்பகர்வின்மீது அத்தகைய விளக்கத்தின் முடிவில் அத்தகைய சாட்சியை அத்தகைய நீதிமன்றத்தின்முன் கொணர்ந்து விளக்கத்துக்குட்படுத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் விளக்கத்தில், குற்றப்பகர்வில் குற்றஞ்சார்த்தப்பட்டவரான மறுத்துரைக்கும் கூற்றுக்களைக் குற்றம் சாட்டப்பட்டவர் செய்திருந்தார் என எண்பித்தல் போதுமானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூற்றுக்களில் எக்கூற்றுப் பொய்யானதென்பதை என்பித்தல் அவசியமற்றதாகும்.

(3) தலைமைதாங்கும் நீதிபதி, அது உசிதமானதென அவர் கருதினால் ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஏதேனும் சாட்சியின் விளக்கத்தை, பொருத்தமானதென அவர் கருதக்கூடிய அத்தகைய காலத்திற்கு ஒத்திவைக்கலாம் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சந்தர்ப்பத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் அத்தகைய விளக்கத்தின் முடிவுவரை விளக்க மறியலில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றிடு செய்தல்.

"ஆவணங்களை அல்லது பொருட்களின் மாதிரிகளைக் கோருவதற்கு சேகரிப்பாளருக்கு உள்ள தத்துவம்.

9. (1) சுங்கச் சேகரிப்பாளரால் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சுங்க அலுவலர், சுங்கத்துடன் தொடர்புடைய ஏதேனும் கருத்தை நிச்சயிக்கும் அல்லது சரிபார்க்கும் நோக்கத்திற்கென அல்லது இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அதனை விசாரணை செய்தல் அவரது கடமையாகவிருக்கும் ஏதேனும் கருமம் தொடர்பாக எழுத்திலான கட்டளைமூலம், அத்து

கைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய இடத்திலும் அத்தகைய காலத்தினுள்ளும் கொடுப்பதற்கு அல்லது காண்பிப்பதற்கு அத்தகைய ஆட்களின் தத்துவத்திலுள்ள, சுங்கம் தொடர்பான அல்லது விசாரணையின் விடயப்பொருள் தொடர்பான ஏதேனும் கருமம் பற்றிய தகவலைத் தரும்படி அல்லது அத்தகைய புத்தகங்களையும் ஆவணங்களையும் ஏதேனும் பொருளின் மாதிரிகளையும் பரிசோதனைக்குக் காண்பிக்குமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், விடயத்துக்கேற்ப அத்தகைய புத்தகங்களையும் பொருட்களின் மாதிரிகளையும் பரிசோதனை செய்வதற்கும், பொழிப்புகள், பிரதிகள் என்பன எடுப்பதற்கும் அத்தகைய அலுவலரை அனுமதிக்கலாம்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக எவரேனும் சுங்க அலுவலரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிப்பதற்கு அத்தகைய அலுவலரினால் அவரிடமிருந்து எத்தகைய தகவல் தேவைப்படுத்தப்படக் கூடுமோ, எத்தகவலைக் கொடுப்பது அவரின் தத்துவத்தில் உள்ளதோ, அத்தகைய ஏதேனும் தகவலைக் கொடுப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றவரும்—

(அ) அத்தகைய கேள்விக்கு விடையளிக்க மறுக்கின்றவரும் ;

(ஆ) அதற்கு வேண்டுமென்றே ஒரு பொய்யான விடையை அளிப்பவரும் ;

(இ) அத்தகைய தகவலைக் கொடுக்க மறுக்கின்றவரும் ;

(ஈ) பொய்யானதென அவர் அறிந்துள்ள அல்லது நம்புவதற்கு காரணமுள்ள ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுகின்றவரும் ; அல்லது

(உ) நியாயமான காரணமின்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரும்,

ஆன எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்திற்கான மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமாளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ, 9ஆ, 9இ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 9அ, 9ஆ, 9இ ஆகிய பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அறிவித்தலைச் சேர்ப்பித்தல்.

9அ. இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியில் எவரேனுமாளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல், கட்டளை அல்லது வேறு ஆவணம் பதிவுசெய்யப்பட்ட அஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்படவேண்டுமென்பதுடன்; அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்டால், அதனைக் கொண்டுள்ள கடிதம் சாதாரண அஞ்சல் நெறியின்போது ஒப்படைக்கப்படும் நேரத்தில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேர்ப்பித்தலை எண்பித்தலில், அறிவித்தல், கட்டளை அல்லது வேறு ஆவணம் தகுந்த முறையில் முகவரியிடப்பட்டு அஞ்சலில் இடப்பட்டுள்ளதென என்பித்தல் போதியதாதல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் ஆவணங்கள் பற்றிய ஊகம்.

9ஆ. ஒரு ஆவணம் தொழிலின் தன்மையைக் கருத்திற் கொண்டு அத்தகைய தொழில் சாதாரணமாக நடைபெறும் போது செய்யப்பட்டிருந்ததாகத் தோன்றுகின்றதும், மாற்றம் அல்லது வேறு சூழ்நிலை காரணமாக வேறு விதமாகச் சந்தேகத்திற்கு உட்படாததுமான—

(i) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளினால் காண்பிக்கப்படுகின்றபோது அல்லது எவரேனும் ஆளின் கட்டுக்காப்பிலிருந்து அல்லது கட்டுப்பாட்டிலிருந்து கைப்பற்றப்பட்டிருக்கின்றபோது, அல்லது

(ii) இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் எவரேனுமாளினால் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்டுள்ள ஏதேனும் தவறைப் புலனாய்வு செய்கின்றபோது, இலங்கைக்கு வெளியே கிடைக்கப்பெற்றுள்ளபோது,

அத்துடன் அத்தகைய ஆவணம், சான்றில் அளிக்கப்படும்போது, நீதிமன்றமானது, மாறாக என்பிக்கப்பட்டாலொழிய—

(அ) எவரேனும் குறிப்பிட்ட ஆளின் கையெழுத்தில் இருப்பதாகக் கொள்ளப்படுவதான அல்லது எவரேனும் குறிப்பிட்ட ஆளினால் ஒப்பமிடப்பட்டுள்ளதென அல்லது எவரேனும் குறிப்பிட்ட ஆளின் கையெழுத்திலுள்ளதென நீதிமன்றம் நியாயமாக எடுத்துக்கொள்ளக்கூடியதான ஒப்பமும் அத்தகைய ஆவணத்தின்

வேறு ஒவ்வொரு பாகமும் அவ்வாளின் கையெழுத்திலுள்ளதெனவும், எழுதி நிறைவேற்றப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஓர் ஆவணத்தின் விடயத்தில், அது எந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்டுள்ளதென அல்லது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதெனக் கொள்ளப்படுகின்றதோ அந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்டதென அல்லது உறுதிப் படுத்தப்பட்டதென ஊகித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பந்தி (i) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓர் ஆவணம் தொடர்பாக அத்தகைய ஆவணத்தின் உள்ளீடுகளினது உண்மையை ஊகித்தல் வேண்டும்.

அரசகரும மொழியில் தேசிய மொழியில் அல்லது ஆங்கில மொழியில் ஆன மொழிபெயர்ப்பு காண்பிக்கப்படுதல்.

9இ. (1) இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கத்திற்கெனத் தேவைப்படும் ஏதேனும் ஆவணம் அரசகரும மொழி, தேசிய மொழி அல்லது ஆங்கில மொழி தவிர்ந்த வேறு ஒரு மொழியில் எழுதப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கும் அல்லது பயன்படுத்தும் ஆள், அரசகரும மொழியில், தேசிய மொழியில், அல்லது ஆங்கில மொழியில் ஆன அதன் சரியான மொழிபெயர்ப்பொன்றை அத்துடன் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படலாம்.

தேவைப்பட்டவாறு ஆவணங்களின் பிரதிகளைக் காண்பித்தல்.

(2) இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்குமாறு எவரேனும் ஆள் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சுங்க அலுவலர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அதன் அத்தனை பிரதிகளைக் காண்பிக்குமாறு அத்தகைய ஆளைச் சுங்க அலுவலர் தேவைப்படுத்தலாம்.

(3) சுங்க அலுவலர் ஒருவர், இறக்குமதி செய்யப்பட்டிருக்கும், ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் அல்லது இடைப்போக்கில் வந்திருக்கும் எவையேனும் பொருட்களுக்கென ஏதேனும் அனுப்பு பொருட்பட்டியல் அத்துடன்/அல்லது ஏதேனும் வேறு ஆவணம் சமர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றவிடத்து, அவர் அத்தகைய அனுப்பு பொருட்பட்டியல், அத்துடன்/அல்லது ஆவணம் மூலப்பிரதியிலும் அத்துடன் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையிலான பிரதிகளிலும் சமர்ப்பிக்கப்படுவதற்கு அவர் தேவைப்படுத்தலாம் என்பதுடன் அவற்றை அவர் எடுத்து வைத்திருக்கலாம்.".

9. பின்வரும் புதிய பிரிவு 10 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— **முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

"தக்கதாக இருக்குமிடத்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது அறவிடப் படவேண்டிய மேலதிகக் கட்டணம்.

10அ. (1) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அறவிடப் படற்பாலதான ஏதேனும் தீர்வையுடன் மேலதிகமாக அமைச்சரானவர், அமைச்சர்களின் அமைச்சரவையினது அங்கீகாரத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அவ்வாறு செய்வது தேசிய பொருளாதாரத்தின் அக்கறைக்கு உகந்ததென அவர் கருதினால், இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பொருட்கள் மீது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு சுங்கத்தீர்வைமீது மேலதிகக் கட்டணத்தை அறவிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் அத்தகைய கட்டளைத் தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன் கசெற்றில்அது வெளியிடப்பட்ட பின்னர் முடியுமானவாறாக விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். பாராளுமன்றம், தீர்மானத்தின்மூலம் இப்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட அறுபது நாட்களினுள் நீக்கஞ்செய்யலாம் என்பதுடன், அத்தகைய அறுபது நாள் காலப்பகுதியைக் கணிப்பதில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதியைக் கணக்கிலெடுத்தலாகாது. அத்தகைய ஏதேனும் கட்டளை நீக்கஞ்செய்யப்படுகின்றவிடத்து, அக்கட்டளையைப் பின்பற்றிச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை மீளளிக்கப்படுதலாகாது.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

"குடியரசின் அளவைக் கூறுகளின் பிரகாரம் இலங்கை நாணயத்தில் தீர்வைகள் செலுத்தப் படுதல்.

17. (1) எல்லாச் சுங்கத் தீர்வைகளும், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உறப்படும் எல்லாத் தண்டங்களும், இழுத்தல்களும், இலங்கைக் குடியரசின் நாணயத்திலும் குடியரசின் அளவைக் கூறுகளின் பிரகாரமும் செலுத்தப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு நாணயத்தை குடியரசின் நாணயப் பெறுமதிக்கு மாற்றுதல்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதிகளை இலங்கைக் குடியரசின் நாணயப்பெறுமதிகளுக்கு மாற்றுதல், இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஒப்புவிகிதங்களைக் கருத்தில் எடுத்து, பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டுக் காலத்திற்குக் காலம் அவரினால் வெளியிடப்படுகின்ற நாணயமாற்று வீதங்களின் பிரகாரம் செய்யப்படுதல் வேண்டும்.

சுங்கத்தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் திரட்டுநிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) எல்லாச் சுங்கத் தீர்வைகளிலிருந்தும் கிடைக்கும் வருமானம், சேகரிப்பாளரினுல் இலங்கைக் குடியரசின் திரட்டு நிதியத்துக்குச் செ த்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்கஞ்செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

12. பின்வரும் புதிய பிரிவு 18 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" நீதிவான் ஒருவர் முன்னிலையில் தீர்வைகள், வருமதிகள் அத்துடன் குறைவாக அறவிடப்பட்ட கட்டணங்கள் முதலியனவற்றை அறவிடுதலுக்கான வழக்கு நடவடிக்கை.

18அ. (1) பிரதம சுங்கச் சேகரிப்பாளர், ஏதேனும் விடயத்தில் 18 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படாமல் விடப்பட்ட, குறைவாக அறவிடப்பட்ட, பிழையாக மீளளிக்கப்பட்ட அல்லது பிழையாகத் தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது மோசடியான உரிமைக்கோரிக்கையொன்றின்மீது செலுத்தப்பட்ட எவையேனும் தீர்வைகள், வருமதிகள் அல்லது வேறு கட்டணங்கள் அறவிடுதல் செயல்முறையில் சாத்தியமற்றதென அல்லது உசிதமற்றதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழான கோரிக்கையில் உள்ளவாறான அத்தகைய தீர்வைகள் வருமதிகள் அல்லது வேறு கட்டணங்களின் விபரங்களையும் தவறுநரின் பெயரையும் அவரின் தொழிலின் கடைசித் தெரிந்த இடத்தையும் அல்லது அவரின் வசிப்பிடத்தையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை, அத்தகைய இடம் எந்தப் பிரிவில் அமைந்துள்ளதோ அந்தப்பிரிவில் நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிவானுக்கு அவர் வழங்கலாம். நீதிவான் அதன்மேல் அத்தகைய தீர்வைகளின் வருமதிகளின் அல்லது வேறு கட்டணங்களின் அறவீட்டிற்காக மேலும் வழக்கு நடவடிக்கைகள் ஏன் அவருக்கெதிராக எடுக்கப்படுதலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு அவருக்கு முன்னர் அத்தகைய தவறுநரை கட்டளையிட்டழைத்தல் வேண்டும் என்பதுடன், போதிய காரணங்கள் காட்டுவதற்குத் தவறுகின்றவிடத்து, அத்தகைய தீர்வைகள், வருமதிகள் அல்லது வேறு கட்டணங்கள் குற்றப்பணத்தினுல் மாத்திரம் தண்டிக்கப்படக்கூடிய அல்லது மறியற்றண்டனையால் தண்டிக்கப்படமுடியாத தவறு ஒன்றுக்காக அத்தகைய தவறுநர் மீது நீதிவானின் தண்டனைத்தீர்வையினுல் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவறொன்றுக்காக விதிக்கப்படும் குற்றப்பணமொன்றின், கொடுப்பனவின்

தவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 291 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அதன் (அ) (ஈ) அத்துடன் (ஐ) என்னும் பந்திகள் நீங்கலாக, அதன்மேல் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் அத்தகைய தண்டனைத் தீர்வையை விதிக்கும் நேரத்தில், அத்தகைய உட்பிரிவின் ஏற்பாடுகளினால் அவரால் எந்தப் பணித்தலைச் செய்திருக்கக்கூடுமோ அத்தகைய ஏதேனும் பணித்தலைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக பிரதம சுங்கச் சேகரிப்பாளரினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மை, இப்பிரிவின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது நீதிவானால் கேள்விக்குட்படுத்தப்படுதலோ அல்லது சோதனை செய்யப்படுதலோ ஆகாது என்பதுடன் அதன்பிரகாரம் அவ்வுட்பிரிவின் எதுவும், அத்தகைய சான்றிதழின் ஏதேனும் கூற்றின் செம்மையைப் பரிசிலனை செய்வதற்கு அல்லது முடிவுசெய்வதற்கு ஒரு நீதிவானுக்கு அதிகாரம் வழங்குவதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 291 ஆம் பிரிவின் (2) தொடக்கம் (5) வரையிலான உட்பிரிவுகளின் எதுவும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் விடயத்திற்கு ஏற்புடையதாகாது.

(4) ஓராம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் விடயத்தில், குற்றப்பணத்தைக் கொடுப்பனவு செய்யத் தவறியமைக்காக, தவறுநர்மீது, விதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என அப்பிரிவினால் கருதப்படுகின்ற மறியற்றண்டனைத் தீர்ப்பு அவருக்கு அளிக்கப்படுகின்றவிடத்து, நீதிவான் அக்குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கான காலத்தை அனுமதிக்கலாம். அல்லது அத்தொகையின் கொடுப்பனவைத் தவணைக் கட்டணங்களில் செலுத்துமாறு பணிக்கலாம்.

(5) குற்றப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறான காரணத்தைக் காட்டுவதற்கு ஓராம் உட்பிரிவின்கீழ் காலத்தை அனுமதிப்பதற்கு முற்போந்ததான நிபந்தனை ஒன்றாகப் பிணையைக் கொடுக்குமாறு நீதிமன்றம் தேவைப்படுத்தலாம் என்ப

துடன், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், தவறுநர் அவ்வாறு பிணை கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்ற விடத்து ஏற்புடையைதாதல் வேண்டும்.

(6) நாலாம் உட்பிரிவின்கீழ் ஒரு நீதிவானினால், ஒரு கொடுப்பனவு தவணைக் கட்டணங்களில் செய்யப்படல் வேண்டுமெனப் பணிக்கப்படுகின்றவிடத்தும் ஏதேனும் ஒரு தவணைக்கட்டணத்தைச் செலுத்துவதில் தவறுகை ஏற்படுகின்றவிடத்தும் செலுத்தப்படாதிருக்கும் மிகுதி எல்லாத் தவணைக் கட்டணங்களின் தவறுகை செய்யப்பட்டதாக வழக்கு நடவடிக்கை எடுக்கப்படலாம்.

(7) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் பிரதம சுங்கச் சேகரிப்பாளரின் சான்றிதழ், தீர்வைகளில், வருமதிகளில் அல்லது வேறு கட்டணங்களில் தவறுகை ஏற்பட்டுள்ளதென்பதற்குப் போதிய சான்றுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தீர்வைகள், வருமதிகள் அல்லது வேறு கட்டணங்கள் திருத்தமற்றவை என்ற ஏதேனும் வழக்குரை ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.".

முன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"சிலநிபந்தனைகளுக்கமைய சுங்கத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து தூதுவராலய ஆளணியினர் முதலியோர்களுக்கு விலக்களிப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

19. (1) அமைச்சரானவர், காலத்துக்காலம் கசெற்றில் வெளியிடும் கட்டளைமூலம், அத்தகைய கட்டளையில் பெயர்குறிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் அந்நிய நாட்டு அரசாங்கத்தின் இலங்கைப் பிரதிநிதிக்கு (அவர் எத்தன்மைத்தான பெயரால், பட்டத்தால் அல்லது பதவிப்பெயரால், அழைக்கப்பட்டாலென்ன) அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள வர்த்தக ஆணையாளருக்கு அத்துடன் அத்தகைய எவரேனும் பிரதிநிதியின் அல்லது ஆணையாளரின் பணியாட்டொகுதியிலுள்ள ஆட்களுக்கு அத்துடன் அத்தகைய வேறு சர்வதேச ஒழுங்கமைப்புக்களின் நிறுவனங்களின் அல்லது குழுக்களின் பிரதிநிதிகளுக்கு அவர்களின் பயன்பாட்டுக்கென, அனுப்பப்படுகின்ற அல்லது அத்தகையவர்களினால் இறக்குமதிசெய்யப்படுகின்ற அல்லது முறியிலிருந்து விடுவிக்கப்படுகின்ற பண்டங்களுக்கு, அவர் தீர்மானிக்கின்றவாறாக, சுங்கத்தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) அமைச்சரானவர், தமது தற்றுணிபில் அத்தகைய கட்டளைமூலம்—

(அ) விலக்கு எந்த நிபந்தனைகளுக்கமைய அனுமதிக்கப்படுகின்றதோ, அந்த நிபந்தனைகள் எவையுமிருப்பின் அவற்றை விதித்துரைக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களின் குடும்பங்களினதும், சுற்றத்தார்களினதும் பயன்பாட்டுக்காக அவர்களுக்கு அனுப்பப்படும் அல்லது இறக்குமதிசெய்யப்படும் பொருட்களுக்கு அத்தகைய விளக்களிப்பை அளிக்கலாம்;

(இ) ஓரம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அல்லது ஒழுங்கமைப்பின் ஆட்களின் ஒரு தரத்திற்கு அல்லது ஒரு வகுப்பிற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட விவரணத்திலான பண்டங்களுக்கு விலக்களிப்பை வரையறைப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளை, அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருப்பின் அதில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றவாறாக, கட்டளை ஆக்கப்பட்டதற்கு முந்திய அத்தகைய தேதியிலிருந்து பயனுற்றிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரானவர், அவரது தற்றுணிபில், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் இப்பிரிவின்கீழ் வழங்கப்படுகின்ற ஏதேனும் விலக்களிப்பை மீளப்பெறலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது எந்த நிபந்தனைகளுக்கமைய விலக்களிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளதோ, அந்த நிபந்தனைகளை வேறுபடுத்தலாம்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், தீர்மானம்மூலம், பாராளுமன்றத்தினால் அது அங்கீகரிக்கப்படாதிருந்தாலொழிய பயனுடையதாகவிருத்தலாகாது.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழான ஏதேனும் கட்டளையில் எது எப்படியிருப்பினும், அத்தகைய கட்டளை எந்தப் பண்டங்களுக்கு ஏற்புடையதாகவிருக்கின்றதோ அத்தகைய பண்டங்கள் எவையும், தலைமைச் சுங்கச் சேகரிப்பாளரின் முன் அனுமதியின்றியும் அத்துடன் அத்தகைய பண்டங்களின் விற்பனை நேரத்தில் அல்லது கையுதிர்த்தல் நேரத்தில் ஏற்புடையதான தீர்வை வீதங்களுக்கும் அத்தகைய பண்டங்களின் பெறுமதிக்கும் அவற்றுக்கு இணங்கத் தீர்மானிக்கப்படுகின்றவாறு அத்தகைய பண்டங்கள் மீது செலுத்தப்படற்பாலனவான தீர்வைகள் பிரதான

சேகரிப்பாளருக்குச் செலுத்தப்பட்டாலன்றியும் விற்கப்படுதலோ அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கப்படும் எவையேனும் பண்டங்களை இழப்பிக்கச் செய்யப்படுவதற்கு உட்பட்டதாதல் வேண்டும்.".

முன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"குடியரசின் சனாதிபதியினாற் செய்யப்படும் இறக்குமதிகளுக்கும் ஏற்றுமதிகளுக்கும் சுங்கத்தீர்வைகளிலிருந்து விலக்களித்தல்.

20. (1) இலங்கைக் குடியரசின் சனாதிபதியின் அலுவலக ரீதியான பயன்பாட்டுக்கென இறக்குமதிசெய்யப்படும் அல்லது பிணைப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படும் ஒவ்வொரு விவரணத்தினதான பொருட்கள் சுங்கத்தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

முன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"மீள ஏற்றுமதி செய்வதன் மீதான திரும்பப் பெறுகை.

22. (1) ஏதேனும் வெளிநாட்டுத் துறைமுகத்திலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டிருந்து இலங்கில் அடையாளம் காணக்கூடியனவும் சுங்கத்தீர்வைகள் செலுத்தப்பட்டிருக்கின்றனவுமான, எவையேனும் பண்டங்கள் எவையேனும் வெளிநாட்டுத் துறைமுகத்திற்கு மீள ஏற்றுமதி செய்யப்படுமிடத்து அவற்றின்மீது அத்தகைய தீர்வைகளின் பத்தில் ஒன்பதை விஞ்சாத தீர்வை திரும்ப பெறுகையாக மீளச் செலுத்தப்படலாம் :—

ஆயின், அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் :—

(அ) பண்டங்கள், பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலரினால் அடையாளம் காணப்படுதல் வேண்டும்;

(ஆ) பண்டங்களின் சொத்தாண்மையில் எவ்வித மாற்றமும் இருந்திருக்கவில்லை;

(இ) இறக்குமதியாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலை காரணமாக மீள ஏற்றுமதி தடுக்கப்பட்டிருந்ததென பிரதான சுங்கச் சேகரிப்பாளர் கருதி அத்தகைய காலம் விசேடமாக அவரால் நீடிக்கப்பட்டாலன்றி மீள ஏற்றுமதி செய்தல், சுங்க அலுவலகத்தின் பதிவேடுகள் காட்டுகின்றவாறான இறக்குமதித் தேதியிலிருந்து ஓர் ஆண்டினுள் செய்யப்படுதல் வேண்டும்;

(ஈ) எந்தப் பண்டங்களின்மீது செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வை நூறு ரூபாவை விஞ்சாததாக இருக்கின்றதோ, (தனது சொந்தப் பாவிப்பிற்கென எவரேனும் ஆளினால் தபால் மூலம் இறக்குமதிசெய்யப்பட்ட பண்டங்கள் தவிர்ந்த) அந்தப் பண்டங்கள்மீது சுங்கத் தீர்வை திரும்பப்பெறுகை எதுவும் அனுமதிக்கப்படலாகாது ;

(உ) தீர்வையைத் திரும்பப் பெறுதலுக்கான உரிமைக் கோரிக்கை, மீள ஏற்றுமதி செய்யும் நேரத்தில் தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் கப்பலிலேற்றுவதற்கு உட்செல்லல் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் கொடுப்பனவு கோரப்படுதலும் வேண்டும்.

(ஊ) இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களின் மீள ஏற்றுமதியின்மீது ஒரு தீர்வையைத் திரும்பச் செலுத்துதல் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து, தீர்வையைத் திரும்பச் செலுத்துவதற்காக அவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொகை, தீர்வை வீதங்களில் அல்லது அந்நியச் செலாவணி வீதங்களில் வேறுபாடுகள் எப்படியிருப்பினும், அவை இறக்குமதிசெய்யப்பட்ட நேரத்தில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான தீர்வையின் பத்தில் ஒன்பது பங்கை விஞ்சுதலாகாது.

(2) எனினும், சுங்கத் தீர்வைகள் செலுத்தப்பட்டிராதவிடத்து, பிரதான சுங்கச் சேகரிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின் அ, ஆ, இ ஆகிய பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் இணங்கி ஒழுகப்பட்டுள்ளனவெனத் தாம் திருப்தியடைந்தால், இறக்குமதிசெய்யப்பட்ட நேரத்தில் செலுத்தப்பட்டிருக்கக் கூடியதான தீர்வையின் பத்தில் ஒரு பங்கைச் செலுத்துவதன்மீது அத்தகைய பொருட்களின் மீள ஏற்றுமதியை அனுமதிக்கலாம்.".

**16.** பின்வரும் புதிய பிரிவு 22 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது, எப்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"தீர்வைக் கொடுப்பனவு இல்லாத இறக்குமதி.*

22. அ(1) பிரதான சுங்கச் சேகரிப்பாளர் அல்லது அதற்கென அங்கீகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலர் தமது தற்றுணிபின்பேரிலும் காலத்திற்குக் காலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இறக்குமதித் தீர்வையைச் செலுத்தாது மீள ஏற்றுமதிசெய்வதற்கு முன்னப்பட்ட பொருட்களின் இறக்குமதியை அனுமதித்தல் வேண்டும்.

(2) இறக்குமதிசெய்யப்பட்டதும் அதற்கு இறக்குமதித் தீர்வை செலுத்தப்பட்டிருக்கின்ற அல்லது அதன்மீது பெறப்பட்டிருக்கின்ற ஏதேனும் இறக்குமதிசெய்யப்பட்ட பொருளை அதன் பாகமொன்ருக அல்லது கலவைக் கூருகக் கொண்டதும் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டதும் அல்லது பதனஞ்செய்யப்பட்டதுமான எவையேனும் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவிடத்து, பண்டங்களின் உற்பத்தியில் அல்லது பதனஞ்செய்தலில் பயன்படுத்தப்பட்டுள்ளதென தலைமைச் சுங்கச் சேகரிப்பாளரின் திருப்திக்குத் தோன்றுகின்றவாருன மூலப்பொருட்களின் அல்லது பொருட்களின் அத்தகைய அளவு சம்பந்தமாக உள்ளபடியாக செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட இறக்குமதித் தீர்வையின் முழுவதுமான அல்லது பகுதியளவிலான மீளளிப்பு அல்லது தள்ளுபடி, அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய நியதிகளின்மீதும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாகவும் அனுமதிக்கப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்புமூலம் அமைச்சரால் காலத்திற்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய பண்டங்களுக்கு மாத்திரம் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு அத்துடன் அவரினுல் விதித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களிலும் முயற்சிகளிலும் பயன்படுத்துவதற்கெனத் தற்காலிகமாக இறக்குமதி செய்யப்படும் பொறித்தொகுதிகளினதும், இயந்திரத் தொகுதிகளினதும், சாதனங்களினதும் விடயத்தில் செலுத்தப்படும் அல்லது பெற்றுக்கொள்ளப்படும் தீர்வையின் திரும்பச் செலுத்துதல் அல்லது தள்ளுபடி, அத்தகைய பொறித்தொகுதிகள், இயந்திரத் தொகுதிகள், சாதனங்கள் தொடர்பில் அவை பயன்படுத்தப்பட்ட காலம் அவற்றின் பெறுமதியின் தேய்மானம், அத்துடன் அத்தகைய வேறு சூழ்நிலைகள் என்பனவற்றைக் கருத்தில் எடுத்து அவர் விதித்துரைக்கக்கூடியவாருன அத்தகைய வீதங்களில் அமைச்சரினுல் மீளஏற்றுமதிமீது அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

ஏற்றுமதித் தீர்வையைத் திரும்பச் செலுத்துதல்.

(5) இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான இலங்கைக்கு வெளியே ஏதேனும் இடத்திற்கு ஏற்றுமதிசெய்யப்பட்டுப் பின்னர் மீள இறக்குமதி செய்யப்படுமிடத்து, இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏற்றுமதிசெய்யப்பட்ட நேரத்தில் செலுத்தப்பட்ட சுங்க ஏற்றுமதித் தீர்வைகளின் திரும்பப் பெறுகையானது அத்தகைய பண்டங்கள் எந்தக் காலத்தினுள் இறக்குமதிசெய்யப்படுகின்றனவோ அந்தக் காலத்தைக் கருத்தினுள் எடுத்து, அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள்மீதும் நிபந்தனைகள் மீதும் அத்தகைய பொருட்கள் சம்பந்தமாக முற்றாக அல்லது பகுதியளவில் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

மோசடியான கோரிக்கைக்கான தண்டம்.

(6) தீர்வையின் திரும்பப் பெறுகைக்காக அல்லது தள்ளுபடிக்காக ஏதேனும் மோசடியான கோரிக்கையை அறிந்துகொண்டே செய்வதில் சம்பந்தப்படும் ஒவ்வோர் ஆளும் சுங்கச் சேகரிப்பாளரின் தெரிவின் பேரில் நூறு ஆயிரம் ரூபாவை விஞ்சாத அல்லது அத்தகைய உரிமைக் கோரிக்கை எந்தப் பண்டங்கள்மீது செய்யப்படுகின்றதோ அப்பண்டங்களின் பெறுமதியின் மூன்று மடங்குக்கான தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு "ஆயிரம் ரூபா" என்னும் சொற்களுக்ப் பதிலாக "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஆயந் தீர்க்கப் படாததற்கும் கப்பற்பத்திரங் களுடன் கப்பற் சாக்கு நேரொத்திரா விடின் அல்லது கலத்திலிருந்து வெளியே அனுப் பப்படும் பண் டங்கள் தோதான இடங்களில் இறக்கப்படா விடின் கப்பல் முதல்வர் மீதான தண்டம்.

32. எந்த இடத்திலிருந்து அல்லது இடங்களிலிருந்து அவ்விடயத்தில் வழமையாக வழங்கப்படுகின்ற இசைவுச் சான்றுப் பத்திரம் அல்லது வேறு பத்திரங்களின்றி, ஏதேனும் கப்பல் இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தை வந்தடைந்தால் கப்பல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டம் ஒன்றுக்கு (எந்த இடத்தில் இருந்து கப்பல் வந்ததோ, அந்த இடத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் இசைவுச் சான்றுப் பத்திரத்தின் மீது அல்லது வேறு பத்திரத்தின் மீது கப்பலில் ஏற்றப்பட்ட பண்டங்கள் எவையும் அத்தகைய கப்பலில் காணப்படாவிட்டால் அல்லது அப்பண்டங்களின் அளவு குறைவாகக் காணப்படுவதுடன் குறைவுபாட்டிற்கு உரிய காரணம் காட்டப்படாதிருப்பின் அல்லது கப்பலிலிருந்து வெளியே அனுப்பப்பட்ட பண்டங்கள் நியமிக்கப்பட்ட இடங்களில் இறக்கப்படாதிருப்பின் முதல்வர், காணமற்போன, குறைவாகவுள்ள அத்துடன் காரணம் காட்டப்படாத எவையேனும் பண்டங்கள் சம்பந்தமாக அத்தகைய பண்டங்களுக்குத் தீர்வை அறவிடற்பாலதாக இருப்பின், அத்துடன் அத்தகைய தீர்வை உறுதிப்படுத்தப்பட முடியுமானால், இருபத்தையாயிரம் ரூபா தண்டமொன்றுக்கு அல்லது அதன்மீது அறவிடற்பாலதான தீர்வையின் தொகையை விஞ்சாத பணத்தொகையொன்றுக்கு (இவற்றில் எத்தொகை கூடியதோ அத்தொகைக்கான தண்டத்துக்கு) ஆளாதல் வேண்டும். அல்லது அத்தகைய தீர்வை உறுதிப்படுத்தப்படமுடியாவிடின் அல்லது அத்தகைய பண்டங்களுக்குத் தீர்வை அறவிடப்படமுடியாவிடின், காணமலிருக்கின்ற அல்லது குறைவாகவுள்ள ஒவ்வொரு பொதிக்கும் பத்தாயிரத்து இருநூறு ரூபாவை விஞ்சாத தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தண்டத்தைக் கொடுப்பனவு செய்ய தேவைப்படுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய தண்டத்துக்கு ஆளாகின்றவரும் அத்துடன் அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்கு மறுக்கின்றவருமான ஏதேனும் கலத்தின் முதல்வருக்கு கப்பலை வெளியே கொண்டுசெல்ல இசைவுச் சான்று ஒன்று வழங்க மறுப்பதற்கும் சுங்கச் சேகரிப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது :

ஆயின், எப்போதும், இதில் உள்ளது எதுவும், இசைவுச்சான்று இல்லாமைக்கான விளக்கமொன்றை ஏற்பதிலிருந்து அல்லது திருத்தப்பட்ட அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல்மூலம், கப்பலின் முதல்வர் வெளிப்படையான வழுக்களைத் திருத்துவதற்கு அல்லது தற்செயலாக அல்லது கவனக்குறைவால் நிகழ்ந்த விட்டுவிடுகைகளுக்கான காரணத்தைக் காட்டுவதற்குத் தமது தற்றுணிபின்பேரில் அனுமதிப்பதிலிருந்து அல்லது ஏதேனும் வகுப்பினவான பண்டங்கள் தொடர்பில் மதிப்பீடொன்று செய்யப்பட்ட ஒரேயொரு தீர்வையைத் தமது தற்றுணிபின்பேரில் ஏற்றுக்கொள்வதிலிருந்து சுங்கச் சேகரிப்பாளரைத் தடைசெய்வதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத மாற்றீடு செய்தல்.*

*"இடைப்போக்கிலுள்ள பண்டங்களும் ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு மாற்றப்படும் பண்டங்களும் தீர்வைக் கொடுப்பனவு இல்லாது அனுமதிக்கப்படுதல்.*

37. (1) கலமொன்றில் உள்ள பண்டங்கள் எவையும், அவை அதே கலத்தில் இலங்கைக்கு வெளியே உள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு இடைப்போக்காகக் கொண்டு செல்ல முன்னப்பட்ட பண்டங்கள் என இறக்குமதிச் சரக்குப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தால், தீர்வைக் கொடுப்பனவு எதுவுமின்றி அவை அவ்வாறு அனுப்பப்படுவது அனுமதிக்கப்படலாம்.

(2) சுங்கச் சேகரிப்பாளரின் அல்லது வேறு தகுந்த அலுவலரின் விசேட கட்டளையினாலன்றி அல்லது தீர்வையைச் செலுத்திப் பண்டங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் தவிரவும், அத்துடன் பின்னர் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவுமன்றியும் எவையேனும் பண்டங்கள் தீர்வைக் கொடுப்பனவு இன்றி ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு மாற்றப்படுதலாகாது. இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக எவையேனும் பண்டங்கள் ஒரு கலத்திலிருந்து இன்னுமொரு கலத்திற்கு மாற்றப்படின் அல்லது ஒரு கலத்திலிருந்து இன்னுமொரு கலத்திற்கு மாற்றுவதற்கு எத்தனிக்கப்படின், அத்தகைய பண்டங்கள் படகுடனும் அவற்றை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்ட வேறு கருவி வகைகளுடனும் கைப்பற்றப்படலாம் என்பதுடன், இழப்பிக்கச் செய்யப்படுவதற்கு உட்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது :—

"இறக்குமதியாளர் வேறு ஆவணங்களுடன் பதிவுண்டியலை ஒப்படைத்தல்.

47. எவையேனும் பண்டங்கள், தீர்வைக் கொடுப்பனவிற்காயினுஞ்சரி அல்லது குதத்திலிடப்படுவதற்காயினுஞ்சரி அல்லது குதத்திலிருந்து வெளியே எடுப்பதன் மீது தீர்வை செலுத்துவதற்காயினுஞ்சரி அல்லது அத்தகைய பண்டங்கள் தீர்வையற்ற பொருட்களாக இருப்பினும் சரி உள்நோக்கிக் கொண்டு வரும் ஆள், கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்புமூலம் சுங்கச் சேகரிப்பாளரினால் அதற்கென குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அளவினது நிறத்தினதுமான ஒரு படிவத்தின் மீது பண்டங்கள் எந்தக் கப்பலில் இறக்குமதி செய்யப்பட்டனவோ அந்தக் கப்பலின் பெயரையும் அக்கப்பலின் முதல்வரின் பெயரையும் அத்துடன் எந்த இடத்திலிருந்து அவை கொண்டு வரப்பட்டனவோ அந்தக் குதத்திலிடப்படவிருப்பின், குதம் பற்றிய விவரணத்தையும் அமைந்துள்ள இடத்தையும், அத்துடன் பண்டங்கள் எந்த ஆளின் பெயரில் பதியப்படவேண்டுமோ அந்த ஆளின் பெயரையும் பண்டங்களின் தொகையையும் பெறுமதியையும் விவரணத்தையும் அத்துடன் எண்ணிக்கைகளும் இலக்கங்களில் தரப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய படிவத்திலும் விதத்திலும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இணைப்படிகளின் எண்ணிக்கை, சுங்கச் சேகரிப்பாளர் தேவைப்படுத்துகின்றவாறு அத்தகைய எண்ணிக்கையில் இருத்தலும் வேண்டும் ; அத்துடன், அத்தகைய பதிவுண்டியல் சுங்கச் சேகரிப்பாளரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் ஒப்பமிடப்பட்டு உரிய அலுவலருக்கு அனுப்பப்பட்டவுடன், அத்தகைய பொருட்களைப் பரிசோதனை செய்து ஒப்படைப்பதற்கு, அத்தகைய பதிவுண்டியல் அவருக்கு எழுத்தாணையாதல் வேண்டும் ; ஆனால் அத்தகைய பண்டங்கள் பதிவுண்டியலிலுள்ள விபரங்களோடு ஒத்திராவிடின், அவை இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும், அத்துடன், அத்தகைய இழப்பிப்

பானது அவற்றுடன் பதியப்பட்டிருக்கும் அல்லது பொதியாக்கப்பட்டிருக்கும் வேறு எல்லாப் பண்டங்களையும், அத்துடன் அவை எப்பொதிகளினுள் வைக்கப்பட்டுள்ளனவோ அப்பொதிகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

28. பின்வரும் புதிய பிரிவு 50 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 50அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நிபந்தனையின் நிமித்தம் சுங்க தீர்வைகளிலிருந்தும் அத்துடன் வேறு வருமதிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்ட பண்டங்களுக்கு ஏற்புடைத்தான நடவடிக்கை.

50அ (1) இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பண்டங்கள்—

(அ) அவற்றின் இறக்குமதியின்மீது அறவிடற்பாலனவான சுங்கத் தீர்வைகளின் அல்லது வேறு வருமதிகளின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது அதற்கென முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட எவையேனும் நிபந்தனைகளுக்கமைய குறைந்த வீதங்களில் சுங்கத்தீர்வை அறவிடப்பட்டிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) ஏதேனும் வேறு சட்டத்தின்கீழ், அவற்றின் இறக்குமதிக்குப்பின்னர் நிறைவேற்றப்பட வேண்டிய எவையேனும் நிபந்தனைகளுக்கமைய இலங்கையினுள் அனுமதிக்கப்பட்டிருந்து, அத்தகைய நிபந்தனைகள் இணங்கியொழுகப்பட்டிராதவிடத்து, அத்தகைய பண்டங்கள் இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய பண்டங்கள் இழப்பிக்கச் செய்யப்படும் நேரத்தில் அத்தகைய பண்டங்கள் எந்த ஆளின் பெயரில் இறக்குமதி செய்யப்பட்டனவோ அந்த ஆளின் உடைமையில் இல்லாதிருப்பின் அத்தகைய ஆள், பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்ட நேரத்தில் இருந்த அவற்றின் பெறுமதியின் அத்தகைய மூன்று மடங்கை விஞ்சாத ஒரு பணத்தொகையை இழத்தல் வேண்டும்.

(3) முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுவதற்கு அல்லது செலுத்தப்படற்பாலதான தீர்வை செலுத்தப்படுவதற்கு இக்கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் வேறு ஏற்பாட்டின்கீழ் பொறுப்பேற்பு அல்லது பாதுகாப்பு எதுவும் வழங்கப்பட்டிருந்தாலுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவின்கீழ் பண்டங்கள் எவையும் இழப்பிக்கச் செய்யப்படுதலானது, அத்தகைய பொறுப்பேற்பை அல்லது பாதுகாப்பை வழங்கியிருக்கும் ஆளெவரினதும் பொறுப்பெதையும் பாதித்தலுமாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"பெறுமதிப்படி தீர்வைகளை அறவிடும் நோக்கத்திற்காக, பண்டங்களின் பெறுமதி.

51. பொருட்களின் இறக்குமதியின்மேல் அவற்றின்மீது சுமத்தப்படும் சுங்கத்தீர்வைகள், பெறுமதிப்படி அறவிடப்படும் எல்லா விடயங்களிலும் அத்தகைய ஒவ்வொரு பொருளினதும் பெறுமதி, அந்தந்த அதன் விவரணத்துடனும், தொகையுடனும் பதிவில் குறிப்பிடப்படுதல் வேண்டும், என்பதுடன் அத்தகைய பெறுமதி, உ என்னும் அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் தீர்வைகள், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஒரு பெறுமதியில் செலுத்தப்படுதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"இணங்கியொழுகாமைக்கான அல்லது பொய்யான வெளிப்படுத்துகைக்கான இழப்பிப்பு, பண்டங்கள் மீளப்பெறப்பட முடியாத விடத்து, அவற்றின் பெறுமதியின் இழப்பிப்பு.

52. எவையேனும் பண்டங்கள் சம்பந்தமாக வெளிப்படுத்துகை செய்யப்பட்ட பெறுமதியானது, அட்டவணை உ வின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருக்கவில்லையெனவும் அத்துடன் அந்த வெளிப்படுத்துகை பொய்யானதெனத் தெரிந்து கொண்டே அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்பட்டிருக்கிறதென சுங்க அலுவலர்களுக்குத் தோன்றுகின்றவிடத்து, எந்தப் பண்டங்கள் சம்பந்தமாக அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்பட்டிருந்ததோ அந்தப் பண்டங்கள், அவை எந்தப் பொதிகளில் வைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பொதிகளோடு இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய பண்டங்கள் மீளப் பெறப்பட முடியாத விடத்து, அத்தகைய பொய்யான வெளிப்படுத்துகையைச் செய்கின்ற ஆள் சுங்கச் சேகரிப்பாளரின் விருப்பத்தின்பேரில் அத்தகைய பண்டங்கள் பெறுமதியின் மூன்றுமடங்கு பெறுமதியை இழத்தல் வேண்டும். அல்லது இரண்டாயிரம் ரூபா தண்டப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"களஞ்சியப் பொருட்பட்டியல் தகுந்த அலுவலரினால் வழங்கப்படலாம்.

54. எந்த ஆளின் பெயரில் மீள இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் எவையும் ஏற்றுமதிக்காகப் பதியப்பட்டனவோ, அந்த ஆள், அத்தகைய பண்டங்கள் உள்ளே கொண்டுவரப்பட்டதையும் வெளியே எடுத்துச் செல்லப்பட்டதையும், அத்துடன் அவை மீண்டும் உள்ளே கொண்டுவரப்பட்ட போதும், வெளியே எடுத்துச் செல்லப்பட்டபோதும் ஆகிய இரு தடவைகளும், பொதிகளின் அடையாளங்களையும் எண்ணிக்கைகளையும் குறிப்பீடு செய்கின்ற விபரங்களினது, அவரினால் கையொப்பமிடப்பட்ட சரியான விவர அறிக்கையொன்றை தகுந்த சுங்க அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும் ; அதன்மேல் அத்தகைய பண்டங்கள் சட்ட

முகவர் தொழில் தருநரின் பெயரை வெளிப்படுத்தல் வேண்டும்.

அனுப்பு பொருள் பெறுவர் உரிமையாளர் யாரென வெளிப்படுத்தல் வேண்டும்.

அடையாளம் பற்றியும் உரிமையாளர் மாற்றப்படாமை பற்றியும் உரிமையாளர் வெளிப்படுத்தல் வேண்டும்.

களஞ்சியப் பொருட் பட்டியல் மூலமான பதிவு வழங்கப்படல் வேண்டும்.

ரீதியாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன எனக் காணுகின்ற அலுவலர், அவற்றுக்கு களஞ்சியப் பொருட் பட்டியலொன்று வழங்குதல் வேண்டும்; எந்த ஆளின் பெயரில் அத்தகைய பண்டங்கள் ஏற்றுமதிக்காகப் பதியப்பட்டனவோ, அந்த ஆள் அத்தகைய பண்டங்களின் உரிமையாளராக இல்லாமல் இருந்து, உரிமையாளரின் முகவராக இருக்குமிடத்து, அந்த முகவர், அத்தகைய முகவராக எந்த ஆளினால் அவர் ஊழியத்தில் அமர்த்தப்பட்டாரோ, அந்த ஆளின் பெயரை அத்தகைய களஞ்சியப் பொருட் பட்டியலில் வெளிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன், எந்த ஆளுக்கு அவ்வாறு திருப்பி அனுப்பப்படும் பண்டங்கள் அனுப்பப்படுகின்றனவோ, அந்த ஆள் அத்தகைய உரிமையாளராகவும் ஏற்றுமதியாளராகவும் இல்லாதிருந்தால், அவர் எந்த ஆளின் பயன்பாட்டுக்கென அத்தகைய பண்டங்கள் அவருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவோ அந்த ஆளின் பெயரை அத்தகைய களஞ்சியப் பொருட்பட்டியலில் வெளிப்படுத்துகையொன்று செய்து கையொப்பமிடுதல் வேண்டும், அத்துடன், அவ்வாறு உண்மையான உரிமையாளரென நிச்சயப்படுத்தப்பட்டவர், அவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்களின் அடையாளத் தன்மை பற்றியும், ஏற்றுமதி சேகரிப்பாளர், ஏற்றி அனுப்பப்படுவதற்காக அந்த நேரத்தில் அத்தகைய பண்டங்களுக்குத் தாமே உரிமையாளராக இருந்தார் என்பது பற்றியும் அத்தகைய காலத்தின்போது வேறு எவரேனும் ஆளுக்கு விற்கப்பட்டிருக்கவில்லையெனவும் அல்லது கையுதிர்க்கப்பட்டிருக்கவில்லையெனவும் அத்தகைய களஞ்சியப் பொருட்பட்டியலில் வெளிப்படுத்துகையொன்றைச் செய்து கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகையானது சுங்கச் சேகரிப்பாளருக்கு முன்னர் செய்யப்படுதலும் வேண்டும்; அதன்மேல், சுங்கச் சேகரிப்பாளர், ஏற்றி அனுப்பப்படுவதற்காக அத்தகைய பண்டங்களை களஞ்சியப் பொருட்பட்டியல் மூலம் உள்ளே அனுமதித்தல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க தமது ஆணைச்சீட்டை வழங்குதலும் வேண்டும்:

களஞ்சியப் பொருட் பட்டியல் வழங்குவதற்கான நிபந்தனைகள்.

ஆயின், பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நேரத்தில், அறவிடப்பட்ட சுங்கத்தீர்வையில் திரும்பப் பெறுகை அல்லது தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது பண்டங்கள் முதன்முறை வந்தபோது சுங்கத்தீர்வையெதுவும் இல்லாமல் பிணைப் பொறுப்பிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய திரும்பப் பெறுகைக்கு அல்லது தள்ளுபடிக்குச் சமனான தொகை கொண்ட சுங்கத் தீர்வையும், அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட பொருளின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டிருக்கக்

கூடியவாறான அத்தகைய பண்டங்கள் அல்லது பண்டங்களின் அத்தகைய பாகம் முதன்முறை வந்தபோது அவற்றின்மீது செலுத்தப்படற்பாலதானதாயிருந்திருக்கக்கூடிய சுங்கத் தீர்வையும் செலுத்தப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு "ஆயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு "நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு "நானூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" பண்டங்களைக் குதத்தில் வைத்திருப்பதற்கென குதங்களை நியமிப்பதற்கான தத்துவம். பிரிவை மாற்றீடு செய்தல்.

69. பிரதான சுங்கச் சேகரிப்பாளர் தமது கையொப்பத்தின்கீழான எழுத்திலான அறிவித்தல் மூலம் காலத்திற்குக்காலம், இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக குதங்களை அல்லது பாதுகாப்பு இடங்களை நியமிக்கலாம், அத்துடன் அத்தகைய குதங்களின் அல்லது இடங்களின் எந்த வெவ்வேறு பாகங்களில் அல்லது பிரிவுகளில், அத்துடன் எந்த விதத்தில் எந்த ஒழுங்கு விதிகளின் கீழ் எவையேனும் அத்துடன் எந்த வகையான பண்டங்கள் அவை முதன்முறை கொண்டுவரப்பட்டதன்மேல் தீர்வை செலுத்தப்படாது குதப்படுத்தலாமென, வைத்திருக்கப்படலாமென, அத்துடன் பாதுகாக்கப்படலாமென பணிக்கலாம், அத்துடன் குதப்படுத்தப்படவேண்டிய பண்டங்களின் தன்மையும், பெறுமதியையும் கவனத்திற்கொண்டு, மேலே சொல்லப்பட்டவாறு நியமிக்கப்பட்ட ஏதேனும் குதம் சம்பந்தமாக, அல்லது அதில் வைப்பிடப்பட்டுள்ள எவையேனும் பண்டங்கள் சம்பந்தமாக, அல்லது அவற்றின் மீது வருமதியான தீர்வைகளின் பிணைக்காக, எவ்விடங்களில் அத்துடன் எந்த பிணைக்காரர்களுடன் அத்துடன் முறிமூலம் பிணை எத்தொகையில் அல்லது அத்தகைய வேறு பிணை தேவைப்படுத்த வேண்டுமென பணிக்கலாம் ; அத்துடன், பிரதான சுங்கச் சேகரிப்பாளர் அதனுள் குதப்படுத்தப்பட்ட பண்டங்களின் காப்பையும் பாதுகாப்பையும் கவனத்திலெடுத்து அதே போன்ற ஓர் அறிவித்தல் மூலம் அத்தகைய எவையேனும் நியமனங்களை அல்லது வெளிப்படுத்துகைகளை ஒழிக்கலாம் அல்லது மாற்றலாம் ; ஆனால், குதங்களின் நியமனம் பற்றிய அல்லது அதன் ஒழிப்புப் பற்றிய அத்தகைய ஒவ்வோர் அறிவித்தலும் அமைச்சரின் அங்கிகாரத்திற்கு அமைந்துள்ளதாயிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் வெளியிடப்படுதலும் வேண்டும் ;

குறித்துரைக்கப்பட்ட துறைமுகங்களில் குதங்களை நியமித்தல்.

ஆயின், எவ்வாறாயினும், 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, குறித்துரைக்கப்பட்ட ஒரு துறைமுகத்தின் அல்லது ஒரு விமான நிலையத்தினுள் ஏதேனும் குதத்தின் அல்லது பாதுகாப்பிடத்தின் நியமனமானது, விடயத்திற்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் அல்லது அத்தகைய விமான நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியின் ஒருப்பாட்டுடன் செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"குதப்பொறுப்பாளர் சுங்கச் சேகரிப்பாளரினால் தேவைப் படுத்தப்பட்ட வாறு பிணை வழங்குதல் வேண்டும்.

70. மேலே சொல்லப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குதத்தின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது அவர் சார்பில் எவரேனும் ஒருவர், இறக்குமதிக்கான குதத்தீர்வைகளின் கொடுப்பனவிற்காக அல்லது ஏற்றுமதிக்காக முறையான உரிய பதிவிற்காக அல்லது அதனகத்தை எந்நேரத்திலும் குதத்திலிடப்படவேண்டிய அத்தகைய எல்லாப் பண்டங்களின் 84 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான ஏதேனும் உற்பத்தியை அல்லது பொருத்துதலை முறைப்படுத்திய பின்னர் ஏற்றுமதிக்கென, சுங்கச் சேகரிப்பாளர் அங்கீகரிக்கக்கூடியவாறான பிணைக்காரர்களுடன் அல்லது பிணைக்காரரில்லாத முறி மூலம் பிணையை அல்லது அத்தகைய வேறு பிணையைக் கொடுத்தல் வேண்டும் அல்லது கொடுக்கச் செய்வித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய பிணை கொடுக்கப்படும்வரை பண்டங்கள் எவையும் அத்தகைய எவையேனும் குதங்களில் குதப்படுத்தலாகாது.".

முதனமைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் கள் அடையாளமிடப்பட்டு இலக்கமிடப்படுதல் வேண்டும்.

74 குதத்திலிடப்படுவதற்கென அவ்வாறு பதியப்பட்ட எல்லாப் பண்டங்களும் ஏதேனும் குதத்தில் வைப்பிலிடப்படுவதற்கு முன்னர் சொந்தக்காரரின், இறக்குமதியாளரின் அல்லது அனுப்புபொருள் பெறுபவரின் முதலெழுத்துக்களுடன் அல்லது வேறு தனிச்சிறப்புடைய அடையாளங்களுடனும் தெளிவான எழுத்தில் இறக்குமதியாளரினால் முறையாக அடையாளமிடப்பட்டு இலக்கமிடப்படுதல் வேண்டும். அத்துடன் பண்டங்கள் அவற்றையும் குதத்திலுள்ள அத்தகைய பாகங்களிலும் பிரிவுகளிலுமுள்ள ஒவ்வொரு கட்டையும் அல்லது பொதியையும் அடைவது சுலபமாக இருக்கக்கூடியவாறும் அத்துடன் சுங்கச் சேகரிப்பாளர் அல்லது தகுந்த அலுவலர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்திலும் அடுக்கிவைக்கப்படுதல் வேண்டும், அத்துடன் அடுக்கு உடைந்திருந்தால் பண்டங்கள் சுங்கச் சேகரிப்பாளர் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அத்தகைய அடுக்கை உடைத்த ஆளினால் மீள வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், இதனகத்து முன்னர் பணிக்கக்கூடியவாறு அடுக்கி வைப்பதற்கான அசட்டை அல்லது மறுத்தல் குதத்தின் இருப்பாட்சியாளரை அல்லது அவ்வாறு தவறிழைக்கின்ற ஆளை பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்குட்படுத்துதல் வேண்டும். குதம் பிரதான சுங்கச் சேகரிப்பாளர் காலத்திற்குக் காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் பூட்டப்பட்டு பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பது

குதத்திலிடப்பட்ட பண்டங்கள் அடுக்கி பிரிவை வைத்தல்.

தண்டனை.

குதங்களைப் பூட்டுதலும் திறத்தலும்.

டன் அத்தகைய நாட்களிலும் அத்தகைய நேரங்களின் போதும் திறக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் சுங்கச் சேகரிப்பாளர் பணிக்கின்ற அத்தகைய நேரங்களிலும் அத்தகைய அலுவலர்களின் சமுகத்திலும் மாத்திரமும் அத்துடன் அத்தகைய ஒழுங்குவிதிகளின்கீழும் குதத்திற்குச் செல்லல் வேண்டும்; அத்துடன் அத்தகைய எல்லாப் பண்டங்களும் இறக்குமதியின்மீது தரையிறக்கப்பட்டபின்னர் குதத்திற்குக் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும். அல்லது ஏற்றுமதிக்காக அல்லது களஞ்சியப்படுத்தவதற்காகக் குதத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டபின்னர் பிரதான சுங்கச் சேகரிப்பாளர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழ் கப்பலிலேற்றி அனுப்பப்படுவதற்குக் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும்.

பண்டங்களைக் குதத்திற்கும் குதத்திலிருந்தும் கொண்டு செல்லுதல்.

43. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு "நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

44. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு "இரணடாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

45. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

46. பின்வரும் புதிய பிரிவுகள் 84 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ, 84ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ, 84ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

"குதங்களில் பண்டங்களின் உற்பத்தி அல்லது பொருத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய செய்முறை.

84அ. (1) நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நலன்கருதி, இக்கட்டளைச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற ஏதேனும் குதத்தில் பண்டங்களின் உற்பத்தியை அல்லது பொருத்துதலை உட்பட்ட செய்முறையை அனுமதித்தல் பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அத்தகைய குதத்தில் உற்பத்தி அல்லது பொருத்துதல் உட்பட ஏதேனும் செய்முறைக்குள்ளாக்கப்பட்ட பண்டங்கள் எவையும், சுங்கச் சேகரிப்பாளரின் முன்னங்கீகாரமில்லாது உள்ளூர் பாவனைக்கு அல்லது ஏற்றுமதிக்கு விடுவிக்கப்படுதலாகாது.

(3) அத்தகைய பண்டங்கள் அத்தகைய குதத்திலிருந்து உள்ளூர் பாவனைக்கென விடுவிக்கப்படுமிடத்து அவை மீதான தீர்வைகள், அத்தகைய விடுவிப்பின் போது அத்தகைய பண்டங்கள் அத்தகைய விடுவிப்பு நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்டிருந்தாற்போன்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டுச் செலுத்தப்படுதல் வேண்டும்.

உற்பத்தியில் பயன்படுத்தப் படும் பண்டங்களின் விரயத்தையும், அவற்றின் கழிவையும் கையாளுதல்.

(4) தீர்வைகளுக்குட்பட்டனவான பண்டங்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட செய்முறையின்போது விரயமாக்கப்பட்டிருப்பின் அல்லது கழிவாக்கப்பட்டிருப்பின் அல்லது பயன்படுத்திக் கழிக்கப்பட்டிருப்பின், பிரதான சுங்கச் சேகரிப்பாளர், விடயத்திற்கேற்ப, அத்தகைய விரயம் கழிவு அல்லது பயன்படுத்திக் கழிக்கப்பட்ட பண்டங்களைக் குறிக்கக்கூடியவாறான பண்டங்களின் அத்தகைய பாகம் சம்பந்தமான பிரதான சுங்கச் சேகரிப்பாளர் தீர்வைகளைக் குறைக்கலாம்.

ஆயின், தலைமைச் சுங்கச் சேகரிப்பாளர் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய விரயம் அல்லது கழிவு அழிக்கப்பட்டிருப்பின், உள்ளூர் பாவனைக்கு அது எடுக்கப்படின் அப்படிவத்தில் அது இறக்குமதிசெய்யப்பட்டிருந்தாற்போல அத்தகைய விடயத்தின்மீது அல்லது கழிவின்மீது வரியெதுவும் அறவிடலாகாது அல்லது தீர்வை செலுத்தப்படுதலாகாது.

கட்டணங்கள் அறவிடுகள் பற்றிய நிபந்தனைகள்.

(5) அமைச்சரானவர், 84ஆ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள உற்பத்தியாளரொருவருக்கு அல்லது உப ஒப்பந்தக்காரரொருவருக்கு எந்த நிபந்தனைகளுக்குக்கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படவேண்டுமோ அந்த நிபந்தனைகள் சம்பந்தமாகவும் அத்தகைய உரிமத்திற்கென அறவிடற்பாலதான கட்டணங்களுள் அறவீடுகள் தொடர்பாகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

உற்பத்தியாளர் குறித்தசில நிபந்தனைகளின் கீழ் உப ஒப்பந்தம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுதல்.

84ஆ. (1) இக்கட்டளைச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் ஏதேனும் குதத்திலுள்ள பண்டங்களின் உற்பத்தி அல்லது பொருத்துதல் உட்பட செய்முறைப்படுதலுக்கு அனுமதிக்கப்படுகின்ற எவரேனும் உற்பத்தியாளர், பிரதான சுங்கச் சேகரிப்பாளர்—

(i) அத்தகைய வேலையின் நோக்கத்திற்கென சொல்லப்பட்ட வேலைத்தலம் அல்லது வளவு அவரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளதென ;

(ii) தேவைப்படும் உப ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலையைப் பொறுப்பேற்பதற்கு வேலைத் தலத்துக்கு அல்லது வளவுக்கு இடவசதி இருக்கின்றதென ;

(iii) உற்பத்தியாளருக்கும் எந்த ஆளுடன் உப ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளுக்குமிடையில் எழுத்திலான ஒப்பந்தமொன்று செய்யப்பட்டுள்ளதெனவும் ஒப்பந்தம் அவரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும்,

திருப்தியடைந்தால், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் குதமொன்றாக நியமிக்கப்பட்டிராத ஏதேனும் வேலைத் தலத்தில் அல்லது வளவில் உற்பத்தி அல்லது பொருத்துதல் உட்பட செய்முறைப்படுத்தலுக்கு இன்னோர் ஆளுடன் துணை ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு உப ஒப்பந்தத்தின்மூலம் செய்முறைப்படுத்தலுக்கு உற்பத்தியாளர் எவரும் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து, 84அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அவ்வாறு செய்முறைப்படுத்தப்படுகின்ற எவையேனும் பண்டங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) மேற்கூறியவாறு உற்பத்தியாளர் உப ஒப்பநதம செய்வது எப்படியிருப்பினும், உற்பத்தியாளர் இழப்பித்தல்களும் தண்டங்களும் உட்பட அத்தகைய துணை ஒப்பந்தம் செய்யும் தொழிற்பாட்டின்போது உற்பத்தியாளரின் குதத்தின் வெளியே இழப்பின் காரணமாக கூடிய ஏதேனும் தீர்வைகளுக்கு அல்லது வேறு அறவீடு ஏதேனும் தீர்வைகளுக்கு அல்லது வேறு அறவீடுகளுக்குரித்துடையவராதல் வேண்டும்.

47. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"ஏற்றுமதிக்காக மீளக் குதத்திலிடப்படுத்தலுக்கான அல்லது வீட்டுப் பாவனைக்கான பதிவு.

85. குதத்திலிடப்பட்ட பண்டங்கள் எவையும், பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் விதித்துரைக்கக் கூடியவாறான, அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக முறையான பதிவின்மீது தவிர, ஏற்றுமதிக்காக, அல்லது களஞ்சியப் பொருட்களாகக் கப்பலிலேற்றப்படுவதற்கென அல்லது ஒரு குதத்திலிருந்து இன்னொரு குதத்திற்கு அகற்றப்படுவதற்கென, அல்லது அவற்றின்

மீதான முழுத் தீர்வைகள் செலுத்தப்பட்டதன்மேல் வீட்டுப் பாவனைக்காக குதத்திலிருந்து எடுக்கப்படுதலோ அல்லது ஒப்படைக்கப்படுதலோ ஆகாது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

48. முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"வெளியே எடுத்துச் செல்வதற்கான பதிவின் மீது முறையாகக் கப்பலில் ஏற்றப்படுவதற்கும் தரையில் இறக்கப்படுவதற்குமான முறி தேவைப் படுத்தப்படும் போது, கொடுக் கப்படுதல் வேண்டும்.

89. சுங்கத் தீர்வைக்களுக்கமையவுள்ள குதத்திலிடப்பட்ட எவையேனும் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர், ஏற்றுமதியாளர் அல்லது அவரின் முகவரி சுங்கச் சேகரிப்பாளரினால் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, ஏற்றுமதிசெய்யப்படவிருக்கும் பொருட்களுக்கான கோரிக்கையையும், பெறுமதியையும் கவனத்திலெடுத்து கப்பலிலேற்றப்பட்டு ஏற்றுமதிசெய்யப்படவிருக்கும் பண்டங்களின் தன்மையையும் பெறுமதியையும் கருத்தில் கொண்டு, அத்தகைய சுங்கச் சேகரிப்பாளரினால் விதிந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய அவரினால் நிர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையில் முறிமூலம் பிணையை சுங்கச் சேகரிப்பாளரின் திருப்திக்கு அத்தகைய பண்டங்கள் முறையாகக் கப்பலிலேற்றப்பட்டு ஏற்றுமதிசெய்யப்படுதல் வேண்டும் என்பதற்கும் அப்பண்டங்கள் எந்த இடத்தில் தரையிலிறக்கப்படல் வேண்டுமென்பதற்கான வெளியே எடுத்துச்செல்வதற்கென பதிவுசெய்யப்பட்டிருக்கின்றனவோ அல்லது வேறுவகையாக அறிக்கை செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்த இடத்தில் தரையிலிறக்கப்படல் வேண்டும் என்பதற்கும் கொடுத்தல் வேண்டும். அத்துடன் தேவைப்படுத்தப்பட்டால், மேற்கூறப்பட்டவாறு அத்தகைய துறைமுகத்தில் பண்டங்கள் முறையாக இறக்கப்பட்டதுபற்றிய இறங்குதுறையில் உள்ள தகுந்த அலுவலர்கள் கையொப்பத்தின்கீழான வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவைத் திருத்துதல்.

49. முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவு "நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்.

50. முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

51. பின்வரும் புதிய பிரிவு 100 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 100அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 100அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

தீர்வை செலுத்தப்பட்ட பண்டங்களையும் உள்ளூர் மூலத்திலான பண்டங்களையும் குதத்திலிடுதல்.

100 அ (1) இவ் இக்கட்டளைச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் எவையும் எப்படியிருப்பினும், பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளின்கீழ் பண்டங்களின் உற்பத்தி, பொருத்துதல் அல்லது அவற்றைப் பொதியாக்குதல் உட்பட செய்முறை நோக்கத்திற்கென முதன்முறை கொண்டுவரப்பட்டபோது தீர்வைக் கொடுப்பனவில்லாமல் குதத்திலிடப்பட்ட பண்டங்களுடன், பயன்படுத்துவதற்கென உள்ளூர் மூலத்திலான பண்டங்கள் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட, முன்னர் தீர்வை செலுத்தப்பட்டிருந்த பண்டங்கள் இக்கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டதும் 84 அ, என்னும்பிரிவின் கீழ் எந்தக் குதத்தில் செய்முறை அனுமதிக்கப்பட்டிருக்கின்றதோ அத்தகைய ஏதேனும் குதத்தில் குதத்திலிடப்படுவதனை அனுமதித்தல் சுங்கச் சேகரிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் குதத்தில் காணப்படும் பண்டங்கள் எவையும், அத்தகைய பண்டங்கள் அங்கிருப்பதற்கான காரணம், அவற்றின் சொந்தக்காரரினால் சுங்கச் சேகரிப்பாளர், திருப்திப்படுமாறு முறையாகக் காட்டப்படாவிட்டால், பறிமுதலாக்கப்படுதல் வேண்டும்.

(3) இக்கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவு தொடக்கம் 100 ஆம் பிரிவு வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள பண்டங்களுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும். ".

52. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" ஒழுங்குவிதிகள்.

101. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இக்கட்டளைச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் அல்லது எவ்விடம் தொடர்பில் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அவ்விடயம் தொடர்பிலும் அத்துடன் குறிப்பாகப் பின்வரும் நோக்கங்கள் எவற்றிற்குமாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(அ) தீயின் மூலம் விபத்துக்களைத் தடுப்பதற்கும் அத்துடன் மெழுகுதிரிகளை, நெருப்பினை, லாம்புகளை பற்றவைத்தல் அல்லது பயன் படுத்துதல் பற்றியும் அத்துடன் சுங்க வளவுகளினுள் புகையிலை அல்லது மூலிகைகள் புகைத்தல் பற்றியும்;

(ஆ) சுமையாட்கள், தொழிலாளர்கள், வண்டிக்காரர்கள், அத்துடன் பண்டங்களைக் கொண்டுசெல்லும் அல்லது சுங்க வளவுகளினுள் மிருகத்தை அல்லது வாகனத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது ஓட்டுகின்ற வேறு ஆட்களை நெறிப்படுத்துவதற்கும் ஒழுங்குப்படுத்துவதற்கும்;

(இ) சுங்கவளவுகளினுள், எவையேனும் பண்டங்களுக்கு அல்லது ஏதேனும் ஆதனத்திற்கு சேதம் விளைவிக்கப்படுவதைத் தடுப்பதற்கும்;

(ஈ) சுங்க வளவுகளினுள் ஆட்கள் உள்ளே வருவதனைத் தடுப்பதற்கு அல்லது ஒழுங்குபடுத்துவதற்கு அத்துடன் அங்கிருந்து ஆட்களைப் புறந்தள்ளுவதற்கும்;

(உ) சுங்க வளவுகளினுள் ஆட்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கும்;

(ஊ) எவையேனும் பண்டங்களின் சுங்கத் தீர்வைகளைக் கணக்கிடுவதற்கெனக் கொடுத்துதவப் படவேண்டிய ஆவணங்களை விதித்துரைப்பதற்கும் சுங்கத்தீர்வைகளை அறவிடுவதற்கென அத்தகைய பண்டங்களின் பரிசோதனையை ஒழுங்குபடுத்துவதற்கெனவும்; அத்துடன்.

(எ) இரு பிரிவுகளும் உட்பட 92 ஆம் பிரிவு தொடக்கம் 100 ஆம் பிரிவு வரையிலான பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்ற ஆணைப்பத்திரங்களுக்கான புதிய படிவங்களையும் அத்துடன் அத்தகைய ஆணைப்பத்திரங்கள் எந்த விதத்தில் உருவழிக்கப்பட வேண்டும் என்பதையும் விதித்துரைப்பதற்கும், அத்துடன், அத்தகைய ஒழுங்குவிதிகள் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும். இவற்றுக்குக் கீழ்ப்பணியாத ஆள் எவரும் சுருக்கமுறை விளக்கத்தின் மீது, நீதிவான் ஒருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத ஏதேனும் காலத்திற்கான இருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். பிரதம

சுங்கச் சேகரிப்பாளர் குற்றம் புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கவனத்திற்கெடுத்து அத்தகைய தவறிற்காக விதிக்கப்படக்கூடிய குற்றப் பணத்தினை ஐந்தில் ஒன்றிற்குச் சமமான தொகையொன்றைச் செலுத்துவதன்மீது அப் பிரிவின்கீழ் தவறொன்றை இணக்கி வைக்கலாம்.

(2) இப்பிரிவிலும் அதன்கீழ் ஆக்கப்படுகின்ற ஏதேனும் ஒழுங்குவிதியிலும் "சுங்க வளவுகள்" என்பது கசெற்றில் அறிவிப்பு மூலம் பிரதான சுங்க சேகரிப்பாளரினால் காலத்திற்குக்காலம் வரையறுக்கப்படுத்தப்படுகின்றவாறான சுங்க வளவுகள் எனப் பொருள்படும்.".

53. பின்வரும் புதிய பிரிவுகள் 103 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 103அ, 103ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 103 அ, 103 ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்படுத்துதல்.

கப்பற் சரக்கின் சுங்க அகற்றுதலுக்கான கொள்கலன் கேள்வு நிலையங்கள் நாட்டுப் பொருள்கள் அகற்றற் சாலைகள்.

103 அ. (1) சுங்கச் சேகரிப்பாளர், அமைச்சரின் அங்கீகாரத்துடன் விதித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, அத்தகைய காலப்பகுதிகளுக்கெனக் காலத்துக்குக்காலம் ஆக்குகின்ற கட்டளைமூலம், இக்கட்டளை சட்டத்தின், நோக்கங்களுக்காக, கொள்கலன் கேள்வு நிலையங்களையும் உள்நாட்டுப் பொருளகற்றும் சாலைகளையும் தாபிக்கலாம்.

(3) சுங்கச் சேரிகப்பாளரானவர், கொல்கலன் கேள்வு நிலையமொன்றினது அல்லது உள்நாட்டுப் பொருளகற்றல் சாலையொன்றினது சொந்தக்காரரினால் கொடுக்கப்படவேண்டிய தொகையை அதில் களஞ்சியப்படுத்தப்படவேண்டிய பண்டங்களின் தன்மையையும் பெறுமதியையும் கவனத்திலெடுத்து விதித்துரைக்கலாம்.

(3) சுங்கச் சேகரிப்பாளரானவர், அதே மாதிரியான அங்கீகாரத்துடனும் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமையவும் எந்நேரத்திலும் நியாயமான காரணத்திற்காக (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிக்கலாம் அல்லது அத்தகைய கட்டளையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் வேறுபடுத்தலாம் ;

கொள்கலன் களினதும் கொள்கல னிலிடப்பட்ட கப்பற் சரக்கினதும் கொள்கலனி லிடப்படுத்தப் படுவதற்கென முன்னப்பட்ட கப்பற்சரக் கினதும் அசைவு, அத்துடன் கொடுத்துதவப் படவேண்டிய பிணைபற்றிய ஒழுங்குவிதி.

103 ஆ. (1) அமைச்சரானவர்—

(அ) ஆவணப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் அசைவு, பரிசோதனை, இலச்சினையிடல், பிணை, அத்துடன், கொள்கலன்கள், கொள்கலனிலிடப்படு வதற்கென முன்னப்பட்ட கப்பற்சரக்குத் தொடர்பான (வேறு எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ;

(ஆ) கொள்கலன்களை, கொள்கலனிடப்பட்ட கப்பற் சரக்கை, கொள்கலனிலிடப்படுவதற்கென முன் னப்பட்ட கப்பற்சரக்கை கொண்டு செல்வதில் ஈடுபட்டிருக்கின்ற ஆட்களினால் கொடுத்துத வப்படவேண்டிய பிணைத்தொகை தொடர் பிலும்,

ஒழுங்குவிதிகள் ஆக்கலாம்.

நிபந்தனைகளை மீறுவதற்கான தண்டம்.

(2) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படு கின்ற எவையேனும் ஒழுங்குவிதிகளை அல்லது அத்த கைய ஒழுங்குவிதிகளினால் அல்லது அவற்றின்கீழ் சுமத் தப்படுகின்ற ஏதேனும் தேவைப்பாட்டை மீறினால் அல் லது இவற்றோடு இணங்கியொழுகத் தவறினால், அவ்வா ளும் பண்டங்களுக்கு அப்போதைக்குப் பொறுப்பாக உள்ள ஆளும், ஒவ்வொரு விடயத்திலும், ஒன்றில் பண் டங்களின் பெறுமதியின் மூன்றுமடங்கை இழத்தல் வேண்டும் அல்லது சுங்கச் சேகரிப்பாளரின் தெரிவின் பேரில் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத தண் டம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

சுங்கக் கட் டளைச் சட்டத் தின் வேறு எல்லா ஏற்பாடு களும் ஏற்புடை யனவாதல்.

(3) கப்பற் சரக்கு தரையிலிறக்கப்பட்டு உள்நோக்கி அகற்றப்படுவது அல்லது வெளிநோக்கி அகற் றப்படுவது தொடர்பில், இக்கட்டளைச் சட்டத்தின் கீழான வேறு எல்லா ஏற்பாடுகளும், அத்துடன், அவற் றின்கீழ் ஆக்கப்படுகின்ற விதிகளும், ஒழுங்குவிதிகளும் கொள்கலன்களுக்கும், கொள்கலனிலிடப்பட்ட கப்பற் சரக்குக்கும், அத்துடன் கொள்கலனிலிடப்படுவதற்கு முன்னப்பட்ட கப்பற் சரக்குக்கும், ஏற்ற மாற்றங்களு டன், ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 104 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

54. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"முறியின்கீழ் தரைமார்க்க மாகப் பண்டங் களைக் கொண்டு செல்லுதல்.

104. (1) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது கொள் கலனிலிருந்து, கேள்வு நிலையத்திலிருந்து, முறிசெய்யப் பட்ட குதத்திலிருந்து அல்லது சுங்க வளவுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படவேண்டிய பண்டங்கள் எவையும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அவற்றின்மீது தீர்வை கள் அத்துடன் வேறு கட்டணங்கள் செலுத்தப்படுவ தற்கு அவை உட்பட்டனவையாய் இருந்து, அத்துடன் அவற்றின்மீது தீர்வைகள் அத்துடன் வேறு கட்டணங் கள் சுங்கப்பகுதிக்குச் செலுத்தப்பட்டிருக்காமல்

இருந்து அத்துடன் அப்பண்டங்கள் சுங்கப்பகுதியினுல் இலச்சினையிடப்பட்டபின்னர், பண்டங்கள் கொண்டு செல்லும் எந்த ஆள் ஒருவர் சுங்கச் சேகரிப்பாள ருடன் பதிவு செய்துகொண்டு அத்துடன் அத்தகைய தீர்வைகளின் அத்துடன் வேறு கட்டணங்களின் கொடுப்பனவுக்கு முறி மூலமாக பிணை கொடுத்து உதவி இருக்கின்ருரோ அந்த ஆளொருவர் தவிர்ந்த வேறு எந்த ஆளினுலும் ஒரு புள்ளியிலிருந்து இன்னெரு புள் ளிக்குத் தரைமார்க்கமாகக் கொண்டு செல்லப்படுதலா காது.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறி பண்டங்களைக் கொண்டுசெல்லும் எவரேனும் ஆள் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நூறு ஆயிரம் ரூபாவிற்கு விஞ்சாத தண்டமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

55. முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஏதேனும் கப்பலிருந்து வெளியே எடுத்துச்செல்லப்படுகின்ற அல்லது ஏதேனும் கப்பலுக்குக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற அல்லது ஏதேனும் குதத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்லப்படுகின்ற பண்டங்கள், முறையாகப் பதிவு செய்யப்பட்டிராவிடின், இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

107. முறையாகப் பதியப்பட்டிராத பண்டங்கள், பொதிகள் அல்லது சிப்பங்கள் எவையும், ஏதேனும் கப்பலிலிருந்து அல்லது குதத்திலிருந்து தரையிறக்கப் கப்பட்டால், வெளியே எடுத்துச் செல்லப்பட்டால் அல்லது மாற்றப்பட்டால் அல்லது ஏதேனும் கப்பலில் எற்றப்பட்டால், எடுத்துச் செல்லப்பட்டால், அல்லது ஏதேனும் கப்பலுக்கு மாற்றப்பட்டால், அவை இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், எப்போதும், 107அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணம் கூறப் பட்டவாறுன பயணிகளின் பயணமூடை தொடர்பில் பதிவிடு எதுவும் தேவைப்படுத்தப்படலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தினுல் 107அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

56. பின்வரும் புதிய பிரிவு 107 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக் கத்தின் 107அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"உள்நோக்கியும் வெளிநோக்கியும் செல்லும் பயணிகளின் பயணமூடையை ஒழுங்குபடுத்துதல்.

107அ. (1) கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் சுங்கச் சேகரிப்பாளர் விதித்துரைக்கப்படக் கூடியவாறுன அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இலங்கைக்கு வந்தடையும் எவரேனும் பயணி சோதிக் கப்படலாம் என்பதுடன் அவரின் பயணமூடை அத்த கைய அலுவலர்களினுல் பரிசோதனை செய்யப்பட்டு, ஒப் படைக்கப்படலாம்; அத்துடன் இலங்கைக்கு வந்தடை

யும் எவரேனும் பயணியின் பயணமூடையில் அல்லது அந்தப் பயணியிடம் அல்லது ஒன்றில் அவர் தரையிறங்குவதற்கு முன்னர் அல்லது தரையிறங்கிய பின்னர் அவரின் பணிப்பின் பேரில் அல்லது அவரது உடந்தையுடன் அப்பயணப்பொதி எந்த இடத்தில் இடப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் ஏதேனும் தடைசெய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட அல்லது சுங்கப்படுத்தப்படாத பண்டங்கள் எவையும் மறைத்து வைக்கப்பட்டிருக்கக் காணப்பட்டால், சிப்பங்கள் எவற்றை உள்ளடக்கியுள்ளனவோ அவற்றுடனும் சிப்பங்கள் எதில் உள்ளதோ அவற்றைக் கொண்டுள்ள சிப்பங்களுடனும் இழக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) இலங்கையை விட்டுச்செல்லும் எவரேனும் பயணி, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் சுங்கச் சேகரிப்பாளரினால் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அத்தகைய அலுவலர்களினால் சோதிக்கப்படலாம் என்பதுடன் அவரின் பயணமூடை பரிசோதனை செய்யப்படலாம், அத்துடன், இலங்கையைவிட்டுச் செல்லும் எவரேனும் ஆளின் பயணமூடையில் அல்லது அவரிடம் அல்லது கப்பலேறுவதற்கு முன்னர் அல்லது பின்னர் அவரின் பணிப்பின்பேரில் அல்லது அவரின் உடந்தையுடன் எந்த இடத்தில் பயணமூடை இடப்பட்டு இருக்கின்றதோ அந்த இடத்தில் ஏதேனும் தடைசெய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட அல்லது சுங்கப்படுத்தப்படாத பண்டங்கள் எவையும் மறைத்து வைக்கப்பட்டிருக்கக் காணப்பட்டால், அவை சிப்பங்கள் எவற்றை உள்ளடக்கியுள்ளனவோ அவற்றுடனும், அவற்றைக் கொண்டுள்ள சிப்பங்களுடனும் இழப்பிக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பெண் பயணி எவரும், சுங்கச் சேகரிப்பாளரினால் அதற்கென முறையாக அதிகாரமளிக்கப்படாத ஒரு பெண் தவிர்ந்த வேறு ஆள் எவரினாலும் சோதிக்கப்படுதல் ஆகாது.

(4) இப்பிரிவின்கீழ் பிரதம சுங்கச் சேகரிப்பாளரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியான அளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகரிக்கப்படாவிடின் நீக்கஞ் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனையும் கவனத்தில் எடுத்தலாகாது.

(5) எந்தத் தேதியில் பிரதம சுங்கச் சேகரிப்பாளரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கஞ் செய்யப்பட்டதெனக் கருதப்பட்டதோ அந்தத் தேதியின் அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

57. முதன்மைச் சட்டவாக்கத்தின் 110 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஒரு குதத்திலிருந்து அல்லது சுங்க வளவிலிருந்து இன்னொரு குதத்திற்கு, இடத்திற்குப் பண்டங்களை அகற்றுமாறு சேகரிப்பாளர் கட்டளையிடல்.

110. (1) இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவ்வாறு செய்வது உகந்தது எனச் சுங்கச் சேகரிப்பாளர் கருதினால் பண்டங்கள் வைப்பிலிடப்பட்டிருக்கும் சுங்க வளவுகளில் உள்ள குதத்திலிருந்து அல்லது வேறு இடத்திலிருந்து, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான காலப்பகுதிக்குள்ளும், சுங்க வளவுகளினுள்ள அத்தகைய வேறு குதத்துக்கும் அல்லது இடத்துக்கும் பண்டங்கள் அகற்றப்பட வேண்டுமென பண்டங்களின் இறக்குமதியாளரை எழுத்திலான கட்டளைமூலம் தேவைப்படுத்தலாம். அத்துடன் பண்டங்கள் முறையாகப் பரிசோதனை செய்யப்படுவதற்கு கட்டளையில் குறித்துரைக்கப்பட்டிருக்கக்கூடிய தேதியன்றும் நேரத்திலும் (அப்படி எதுவும் இருந்தால்) அவரைச் சமுகமாயிருக்கும்படி தேவைப்படுத்தலாம்.

(2) ஆளெவரும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்படும் கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அவர், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

58. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

'சுங்கமனை முகவர்களுக்கு சுங்கச் சேகரிப்பாளர் உரிமங்களை வழங்குதல்

115. (1) சுங்கச் சேகரிப்பாளர், இலங்கையிலுள்ள எவையேனும் துறைமுகங்களுக்கு அல்லது இடங்களுக்கு கப்பல் எதனதும் வருகை அல்லது அதன் விடுவிப்பு அல்லது எவையேனும் பண்டங்கள் அல்லது பயணமூடை அகற்றுதல் தொடர்பாகத் தொழில் கொண்டு நடாத்துவதற்கென சுங்கமனை முகவர்களாகக் கருமமாற்றுவதற்காக, அட்டவணையில் எடுத்துக் காட்டப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துகின்ற அத்தகைய ஆட்களுக்கு, இக்கட்டளைச் சட்டத்தின் "எ" என்னும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய படிவத்திலும் விதத்திலும் அத்துடன் அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதன்மேல் உரிமங்கள் வழங்கலாம் அத்துடன் அவற்றை வழங்குவதற்கு அவர் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றார். அத்துடன், அவ்வாறு உரிமமளிக்கப்பட்டுள்ள ஆட்கள் மட்டுமே மேற் கூறப்பட்

ேள்ளவாறு முகவர்களாகக் கருமமாற்றுதல் வேண்டும். அத்துடன் சுங்கச் சேகரிப்பாளர், அத்தகைய ஆளெவருக்கும் வழங்கப்பட்ட உரிமம் எதனையும். மோசடி காரணமாக அல்லது துர்நடத்தை காரணமாக அல்லது அதன் நியதிகளின், நிபந்தனைகளின் மீறுகை காரணமாக இல்லாதாக்கலாம் அல்லது ஒழிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வோர் உரிமமும் ஓராண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியானதாதல் வேண்டும் என்பதுடன் காலப்பகுதி முடிவுற்றதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதன் மேல் சுங்கச் சேகரிப்பாளரினால் புதுப்பிக்கவும் படலாம்.

ஊழியர்கள் முகவர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஓர் இறக்குமதியாளரின் அல்லது ஓர் ஏற்றுமதியாளரின் எவரேனும் ஊழியர் சுங்கமனை முகவர் ஒருவரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றை அவர் வைத்திருந்தாலன்றி மேற்கூறப்பட்டவாறு தொழில் கொண்டு நடாத்த அனுமதிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 115அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

59. பின்வரும் புதிய பிரிவு, 115 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் சுங்கப் பகுதியுடன் பதிவுசெய்யப்படல் வேண்டும்.

115 அ (1) பண்டங்களின் ஒவ்வோர் இறக்குமதியாளரையும் ஏற்றுமதியாளரையும் சுங்கச் சேகரிப்பாளரினால், இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுவதற்கு வசதிப்படுத்தும் நோக்கத்திற்கென தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொடுத்துத் தேவைப்படுத்துதல் சுங்கச் சேகரிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட ஓர் இறக்குமதியாளரினால் அல்லது ஓர் ஏற்றுமதியாளரினால் தவிர பண்டங்கள் எவையும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவோ அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படவோ ஆகாது.

(3) இப்பிரிவில், இறக்குமதியாளர் என்பது, வர்த்தக நோக்கமொன்றிற்காக தமக்காக அல்லது இன்னோர் ஆளின் சார்பில் பண்டங்களை இறக்குமதி செய்கின்ற ஓர் ஆள் எனப் பொருள்படும் அத்துடன் ஏற்றுமதியாளர் என்பது, வர்த்தக நோக்கமொன்றிற்காக தமது பெயரில் அல்லது இன்னொருவர் சார்பில் பண்டங்களை ஏற்றுமதி செய்கின்ற ஆள் ஒருவர் எனப் பொருள் படும்."

60. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவைத் திருத்துதல.

61. முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"பொய்யான வெளிப்படுத்துகையைச் செய்தல், பொய்யான ஆவணங்களில் ஒப்பமிடல், அத்துடன், வினைக்களுக்கு உண்மையற்றதாக விடையளித்தல்.

119. ஆளெவரும், ஏதேனும் முக்கிய விவரத்தில் பொய்யானதாக இருக்கின்றதும் கையொப்பத்தின் மூலம் சரிபார்க்கப்பட வேண்டுமெனக் இக்கட்டளைச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் வெளிப்படுத்துகையை, சான்றிதழை அல்லது வேறு சாதனத்தை செய்து கீழொப்பமிட்டால்; அல்லது ஏதேனும் முக்கிய விவரத்தில் உண்மையற்றதாக இருக்கின்றதும், சுங்கச் சேகரிப்பாளருக்கு சுங்கப் பகுதியின் அல்லது தகுந்த அலுவலருக்கு, சமர்ப்பிக்கப்படுகின்றதுமான ஏதேனும் விண்ணப்பத்தில் சேகரிப்பாளர் அல்லது சுங்கப்பகுதியின் தகுந்த அலுவலர் கருத்தில் எடுப்பதற்கென ஏதேனும் வெளிப்படுத்துகையை ஆளெவரும் செய்தால் அல்லது கையொப்பமிட்டால்; அல்லது சுங்கப்பகுதி அலுவலர்களினால் கேட்கப்படும் வினைக்களுக்கு, இக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது சுங்கப்பகுதி தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டவாக்கத்தினால் மறுமொழியளிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஆளெவரும் அத்தகைய வினைக்களுக்கு உண்மையான மறுமொழியளிக்காது விட்டால்; அல்லது ஆளெவரும் இக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது சுங்கப்பகுதி தொடர்பிலான ஏதேனும் சட்டவாக்கத்தினால் அல்லது சுங்கச் சேகரிப்பாளரினால் அல்லது அவரின் பணிப்பின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தைப் போலியாகப் புனைந்தால், பொய்யாக்கினால் அல்லது போலியாகப் புனைந்த அல்லது பொய்யாக்கப்பட்ட ஆவணத்தை வேண்டுமென்றே பயன்படுத்தினால் அல்லது சுங்கப்பகுதி தொடர்பிலான ஏதேனும் தொழிலை அல்லது கருமத்தைக்கொண்டு நடாத்துகையில் பயன்படுத்தப்படும் ஏதேனும் சாதனத்தை சுங்கப் பகுதி தொடர்பிலான ஏதேனும் தொழிலை அல்லது கருமத்தைக் கொண்டு நடாத்துகையில் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் சாதனத்தைப் போலியாகப் புனைந்தால் அல்லது பொய்யாக்கினால் அல்லது போலியாகப் புனையப்பட்ட அல்லது பொய்யாக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் சாதனத்தை வேண்டுமென்றே பயன்படுத்தினால், அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது சாதனத்தை மோசடியாக மாற்றியமைத்தால் அல்லது சுங்கப் பகுதி தொடர்பிலான தொழிலைக் கொண்டு நடத்துகையில், அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது

ஆவணங்களைப் போலியாகப் புனைதலும் பொய்யான ஆவணங்களைப் பயன்படுத்துதலும்.

சாதனத்தை சரிபார்ப்பதற்கு அல்லது பண்டங்களின் பாதுகாப்புக்காக அல்லது ஏதேனும் வேறு நோக்கத் துக்காகச் சுங்க அலுவலர்களினால் பயன்படுத்தப்படும் முத்திரையை, இலச்சினையை, கையொப்பத்தை அல்லது முதலெழுத்துக்களை அல்லது வேறு அடையாளத்தைப் போலியாகப் புனைந்தால், அவ்வாறு மீறுகின்ற ஆளொவ் வருவம், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு பணத் தொகையை இழத்தலுக்கு உரித்தாதல் வேண்டும் என்ப துடன், நாணயம் உட்பட எப் பண்டங்கள் தொடர்பில் ஆவணம் அல்லது கூற்று செய்யப்பட்டதோ அப்பண் டங்களை இழப்பதற்கு அவர் ஆளாதலும் வேண்டும்;

ஆயின், எப்போதும், எந்தக் குறிப்பிட்ட மீறுகை எதற்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட் டத்தினால் வெளிப்படையாக வேறு ஏதேனும் தண்டம் சுமத்தப்பட்டுள்ளதோ அந்தத் தவறுக்கு இந்தத் தண் டம் பொருந்துதலாகாது.".

முதனமைச் சட்டவாக் கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்.

62. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 123அ என் னும் புதிய பிரிவை உட்புகுத் துதல்.

63. பின்வரும் புதிய பிரிவு 123 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத் தால் உட்படுத்தப்படுகிறதென்பதுடன் முதன்மைச்சட்டவாக்கத்தின் 123 அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :—

சுங்கக் கட்டுப் பாட்டிலிருந்து அகற்றப் பட்டும் பண்டங்களி லிருந்து மாதிரிக் கூறுகளை எடுத்தல்.

123 அ. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சுங் கத்துக்கு வெளியே அகற்றப்பட்டு, சொல்லப்பட்ட பண்டங்களின் மாதிரிக்கூறு பரிசோதனை செய்தல் ஏதே னும் சுங்கப்பகுதி நோக்கத்திற்கு அவசியமென சுங்கச் சேகரிப்பாளர் கருதி அவற்றின் மாதிரிக் கூறுகளை எடுப்பதற்கு அதிகாரமளிக்கின்றவிடத்து, இறக்குமதி யாளர், அல்லது பண்டங்கள் எந்த இடத்தில் அல்லது வளவுகளில் வைக்கப்பட்டுள்ளனவோ அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த இடத்திற்கு அல்லது வளவுகளுக்கு அப்போதைக்குப் பொறுப்பாக வுள்ள ஆள் சுங்கப்பகுதியிலிருந்து அத்தகைய பண்டங் கள் அகற்றப்பட்டிருந்த தேதியிலிருந்து 30 நாட்களி னுள் மாதிரிக்கூறு அல்லது மாதிரிக்கூறுகள் கோரப் பட்டால், சொல்லப்பட்ட பண்டங்களின் உண்மைப் படுத்தியதும் பிரதிநிதித்துவப்படுத்தியதுமென சுங்கச் சேகரிப்பாளர் திருப்திக்கு எண்பிக்கப்பட்ட ஒரு மாதி ரிக்கூறு அல்லது மாதிரிக்கூறுகள் சுங்கச் சேகரிப்பாள ருக்கு அல்லது அதற்கென சுங்க சேகரிப்பாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு சுங்க அலுவல ருக்குக் கையளித்தல் வேண்டும். அதற்கான கோரிக்கை

விடுக்கப்பட்ட மூன்று வேலை நாட்களினுள் மாதிக் கூறுகள் கையளிக்கப்படாவிடின் சுங்கச் சேகரிப் பாளர் அல்லது அதற்கென சுங்கச் சேகரிப்பாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு சுங்க அலு வலர் பண்டங்கள் களஞ்சியப்படுத்தக்கூடிய வளவுகளில் நுழைவதற்கும் அதிலிருந்து மாதிரிக் கூறுகளை எடுப் பதற்கும் தத்துவம் உடையவராயிருத்தல் வேண்டும். இப்பிரிவின் முற்போந்த பாகத்தில் குறிப்பீடு செய்யப் பட்ட நோக்கத்திற்கென சொல்லப்பட்ட பண்டங்கள், பொது அரசிறைக்கு மிகவும் நயமான வகை, இனம், தன்மையுடையதாகவுள்ளன என சுங்கச் சேகரிப்பாளர் முடிவுகொள்ளலாம் என்பதுடன் அதன் அடிப்படை யில் நடவடிக்கையும் எடுக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்.

64. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தில் 127அ, 127ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

65. பின்வரும் புதிய பிரிவுகள், 127 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப்படுவதுடன், அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 127அ, 127ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"கைது செய்யப் பட்ட ஆட்கள், சில சூழ்நிலை களில் நீதிவான் ஒருவர்முன் கொண்டுவரப்படு தல் வேண்டும்.

127அ. சுங்கச் சேகரிப்பாளர் ஒருவர், இக்கட்டளைச் சட்டத்தின் தவறொன்றுக்காக 127 ஆம் பிரிவின் நியதி களின்படி கைது செய்யப்பட்டு அவர்முன் கொண்டு வரப்பட்ட ஆளொருவர், புலனாய்வில் தலையிடக்கூடிய ஆளொருவர் என அல்லது தவறின் தன்மையின்படி, தவறு பற்றித் தகுந்த புலனாய்வு செய்வதற்கு அவ் வாளை இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு மேல் கட்டுக்காவலில் வைத்திருப்பது விரும்பத்தக்கது என அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய ஆளை நீதி வான் ஒருவர் முன்னிலையில் கொண்டுவருதல் வேண் டும்.

புலனாய்வு செய் வதற்கென கட் டுக்காவலில் வைத்திருக்கும். ஆளை அணுகு தல்.

127ஆ. வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படி யிருப்பினும் 127 ஆம் பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டு 127அ என்னும் பிரிவின்கீழ் கட்டுக்காவலில் வைத்திருக கப்பட்டிருக்கும் எவரேனும் ஆள் தொடர்பில் இக்கட் டளைச் சட்டத்தின்கீழ் புலனாய்வை நடாத்தும் சுங்க அலுவலர் ஒருவர் அத்தகைய ஆளை அணுகுவதற்கு உரித்துடையவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளை புலனாய்விற்கென நியாயமான மணித் தியாலங்களினுள் ஏதேனும் இடத்திற்குக் கொண்டு செல்வதற்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

66. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "ஆயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

67. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 130 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

68. முதன்மைச் சட்டவாக்கத்தின் 130 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

69. முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவு அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

70. முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

71. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

72. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

73. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

74. முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

75. முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"சில விடயங்களில் கப்பலில் அல்லது கரையில் ஆட்களை, அலுவலர்கள் சோதிக்கலாம்.

138. இலங்கையில் உள்ள ஏதேனும் துறைமுகத்தின் எல்லைகளினுள்ள அல்லது இலங்கையில் உள்ள விமான நிலையத்தின் எல்லைகளினுள் உள்ள ஏதேனும் கப்பலினுள் சொத்தினது, கப்பலினுள்ள ஆளெவரையும் அவரின் பயண மூடையையும் அல்லது வேறு உடைமைகளையும் சோதித்தல் சுங்கப் பகுதியின் எவரேனும் அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்துடன், ஏதேனும் கப்பலிலிருந்து தரையிறங்கிய ஆளெவரையும் அல்லது சுங்க மனைக்கூடாகச் செல்கின்ற அல்லது சென்றிருக்கக்கூடிய ஆளெவரையும், அத்துடன் அத்தகைய ஆளின் பயண மூடையையும் அல்லது வேறு உடைமைகளையும் சோதிப்பது, அத்தகைய ஆள் சுங்கத்துக்குட்படுத்தப்படாத, மட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட பண்டங்களைத் தம்மிடத்தே அல்லது தமது பயணமூடையில் அல்லது வேறு உடைமைகளுக்குள் இரகசியமாக வைத்திருக்கிறார் என ஊகிப்பதற்கு அத்தகைய அலுவலருக்கு நியாயமான காரணமிருந்தால், சோதிப்பது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய அலுவலர் அத்தகைய கடமையைப் புரிவதை ஆளெவரும் தடுத்தால், அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அதற்கென குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நூறு ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துதல்.

76. முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவு "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ஆயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 146 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

77. முதன்மைச் சட்டவாக்கத்தின் 146 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"கட்டளைச்சட்டின் ஏதேனும் பிரிவின்கீழ் இழத்தலுக்கு அல்லது தண்டனைக்கு ஆளாகும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

146. ஏதேனும் செயல் அல்லது விட்டுவிடுகை காரணமாக இக்கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் பண்டங்களை அல்லது ஏதேனும் பணத்தொகையை இழக்க அல்லது குற்றப்பணம் ஒன்று தவிர்ந்த ஏதேனும் தண்டத்திற்கு ஆளெவரும் உட்பட்டவரானால், அத்தகைய ஆள், மேலதிகமாகத் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது—

(அ) எந்தச் செயல் அல்லது விட்டுவிடுகை காரணமாக அவர் இழத்தலுக்கு அல்லது தண்டனைக்கு ஆளாகின்றாரோ, அந்தச் செயல் அல்லது விட்டுவிடுகை இக்கட்டளைச் சட்டத்தின் "ஊ" என்னும் அட்டவணையின் I ஆம் நிரையில் தரப்பட்டுள்ள எவையேனும் பண்டங்களின் இறக்குமதியுடன் அல்லது ஏற்றுமதியுடன் தொடர்புடையதாகவும் அத்துடன் அட்டவணை II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள தொகையை விஞ்சுவதாகவும் இருந்தால், அட்டவணையின் III ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள தண்டனைக்கு ஆளாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எந்தச் செயல் அல்லது விட்டுவிடுகை காரணமாக இழத்தலுக்கு அல்லது தண்டனைக்கு அவர் ஆளாகின்றாரோ அந்தச் செயல் அல்லது விட்டுவிடுகை, ஊ என்னும் அட்டவணையில் தரப்பட்டிராத எவையேனும் அத்தகைய பண்டங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி தொடர்புடையதாக, அத்துடன் அத்தகைய பண்டங்களின் பெறுமதி இருநூற்றைம்பது ஆயிரம் ரூபாவை விஞ்சுகின்றதாகவும் இருந்தால், மூன்று மாத காலமொன்றுக்குக் குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை தண்டப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும் ; அத்துடன்

(இ) செயல் அல்லது விட்டுவிடுகை அத்தகைய பண்டங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி தொடர்புடையதாக இருக்காவிடின் இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை தண்டப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்;

ஆயின் எவ்வாறாயினும் விடயத்துக்கேற்ப இழப்பிக்கச் செய்தல் அல்லது நண்டம் விதிக்கப்பட்டாலோ அல்லது அல்லாவிடினோ அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படக்கூடிய அவசியமல்லாததென பிரதம சுங்கச் சேகரிப்பாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து இப்பிரிவின் கீழ் ஆளெவருக்கும் எதிராக அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடரப்படலாகாது.";

78. முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் இழப்புக்களினதும் தண்டங்களினதும் செலவழிப்பு.

153. (1) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அறவிடப்படும் இழப்புக்கள், தண்டங்கள் எல்லாம்; அத்துடன்

(2) இக்கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவின் கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதான சுங்கச் சேகரிப்பாளரினால் கையுதிர்க்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பண்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், அத்தகைய சுங்கச் சேகரிப்பாளரிடம் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் (உறப்பட்ட செலவினங்கள் எவற்றையும் கழித்தபின்னர்) பின்வருமாறு கொடுப்பனவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

(அ) திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு, அரைவாசி, அதில் அறுபது சதவீதம் திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் (இதனகத்துப் பின்னர் இக்கட்டளைச் சட்டத்தில் "நிதியம் எனக் குறிப்பிடு செய்யப்படும்) சுங்க அலுவலர்கள் முகாமை அத்துடன் நஷ்டஈட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அமைச்சராலும் சம்பந்தப்பட்ட சுங்க அலுவலர்களினதும் தகவல் தருவோர்களாலும் அங்கிகரிக்கப்படவேண்டிய செயல்திட்டம் ஒன்றிற்கு இணங்கப் பங்கிடுவதற்கென பிரதான சுங்கச் சேகரிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழான வெகுமதி நிதியம் ஒன்றுக்கு மற்றைய அரைவாசி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 153அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

79.—பின்வரும் புதிய பிரிவு 153 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"எந்நோக்கங்களுக்கு நிதியத்தின் பணம் பயன்படுத்தப்படலாம் என்பது.

153அ (1) நிதியத்தின் பணத்தொகை பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) மூகாமையின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதற்கு சுங்கச் சேகரிப்பாளருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய வசதிகளை வழங்குவதற்கும் ; அத்துடன்

(ஆ) நிரந்தரமாக முற்றாக அல்லது பகுதியளவில் இயலாதவராயிருக்கின்ற அல்லது தற்காலிகமாகத் திறனிழந்த சுங்க அலுவலர் எவருக்கும் அல்லது சுங்க அலுவலர் எவரும் இறக்கின்றவிடத்து அவரின் சட்டமுறையான பின்னுரிமையாளர்களுக்கும், அத்துடன் விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய இயலாமை திறனிழப்பு அல்லது இறப்பு—

(i) கடமையிலிருக்கும்போது அத்தகைய அலுவலருக்கு ஏற்பட்ட காயம் ஒன்றின் காரணமாக இருக்கின்றவிடத்து, அல்லது

(ii) (அ) அத்தகைய அலுவலர் தம்முடைய வதிவிடத்திலிருந்து கடமைபுரிவதற்காக வேலைத்தளத்துக்குப் பயணம் செய்துகொண்டிருக்கும் அவருக்கு ஏற்பட்ட காயம் ஒன்றின் காரணமாக இருக்கின்றவிடத்து, அல்லது

(ஆ) கடமை முடிந்த பின்னர் தமது வேலைத்தளத்திலிருந்து தமது வதிவிடத்துக்குப் பயணம் செய்துகொண்டிருக்கும்போது ஏற்பட்ட காயம் ஒன்றின் காரணமாக இருக்கின்றவிடத்து, அல்லது

(iii) அத்தகைய அலுவலர் கடமையில் இல்லாதபோது, தமது சாதாரண கடமைகளின் நோக்கெல்லைக்குள் வருகின்ற செயல் எதையும் புரிகையில் அவருக்கு ஏற்பட்ட காயம் ஒன்றின் காரணமாக இருக்கின்றவிடத்து, அல்லது

(iv) அத்தகைய அலுவலர், தமது கடமைகளை நிறைவேற்றுகையில் புரியப்பட்ட ஏதேனும் செயலின் விளைவாக ஏற்பட்ட காயம் ஒன்றின் காரணமாக இருக்கின்ற விடத்து, அல்லது

(v) அத்தகைய அலுவலர், தமது கடமைகளைப் புரிகையில் அவரினால் எடுக்கப்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையின் போதான அல்லது நடவடிக்கையிலிருந்து எழுந்ததான ஏதேனும் பழிவாங்கும் செயலின் விளைவாக ஏற்பட்ட காயம் ஒன்றின் காரணமாக இருக்கின்றவிடத்து,

அத்தகைய அலுவலருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கும்.

(2) எந்த நெறிகளுக்கு, விலக்களிப்புகளுக்கு, மட்டுப்பாடுகளுக்கு அத்துடன் நிபந்தனைகளுக்கு அமைய அத்தகைய நஷ்டஈடு வழங்கப்படுமோ, அந்த நெறிகளுக்கும், விலக்களிப்புகளுக்கும், மட்டுப்பாடுகளுக்கும் அத்துடன் நிபந்தனைகளுக்கும் அத்துடன், அத்தகைய நிதியமொன்று தாபிக்கப்பட்டுத் தொழிற்படுவதற்கு அவசியமான அல்லது உகந்ததான வேறு எல்லாக் கருமங்களுக்கும் அமைச்சரின் அங்கீகாரத்துடன், ஒழுங்கு விதி மூலம், பிரதான சுங்கச் சேகரிப்பாளர் ஏற்பாடு செய்யலாம்.

(3) சுங்க அலுவலர் ஒருவரின் இயலாமை, திறனிழப்பு அல்லது இறப்பு தொடர்பில், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படும் நஷ்டஈடு எதுவும், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அத்தகைய இயலாமை, திறனிழப்பு அல்லது இறப்பு தொடர்பில் வழங்கப்படும் ஏதேனும் ஓய்வூதியம், பணிக்கொடை, நஷ்டஈடு, படி அல்லது வேறு நலன் என்பனவற்றோடு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 166அ, 166ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

80. பின்வரும் புதிய பிரிவுகள் 166 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் புகுத்தப்படுகின்றன என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 அ 166 ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும் :—

ஐநூறு ரூபாவை விஞ்சுகின்ற பெறுமதியுடைய பொருட்களுடன் தவறு சம்பந்தப்பட்டிருக்குமிடத்து அத்தவறு பிணையற்ற தவறாகக் கருதப்படுதல் வேண்டும்.

166அ. இக்கட்டளைச் சட்டத்தின் 129 ஆம் அல்லது 130 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுடன் ஆள் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளாரென சந்தேகிக்கப்படுகின்றவிடத்தும் பொருட்களின் பெறுமதி ஐநூறு ஆயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும் இக்கட்டளைச்சட்டத்தின் அல்லது ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் அத்தகைய தவறு பிணையற்ற தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டத்தை விதிப்பதற்கு அல்லது இழப்பிக்கச் செய்தலுக்குக் கட்டளையிடுவதற்கான வழிகாட்டிகள்.

166ஆ. பிரதான சுங்கச் சேகரிப்பாளர் 27, 28, 29, 30, 31, 32, 38, 47, 52, 56, 57, 59, 62, 63, 64, 67, 68, 74, 76, 77, 110, 119, 129, 130, 131, 132, 133, 135, 136 அத்துடன் 137 ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டமொன்றை விதிக்கும்போது அல்லது இழப்பித்தலொன்றுக்குக் கட்டளையிடும்போது பின்வருவனவற்றைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

(அ) தண்டத்திற்கும் இழப்பிக்கச் செய்தலுக்கும் காரணமாகவிருந்த மீறுகையின் அளவு ;

(ஆ) அத்தகைய மீறுகை காரணமாக இழக்கப்பட்ட அரசிறையின் தொகை ;

(இ) அத்தகைய மீறுகை எந்தப் பொருட்கள் தொடர்பாகப் புரியப்பட்டுள்ளதோ அப்பொருட்களின் விடயத்திற்கேற்பக் கிடைக்கக்கூடிய தன்மை அல்லது குறைபாடு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவைத் திருத்துதல்.

81. முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) "சுங்கச் சேகரிப்பாளர்" என்ற வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் :—

"கொள்கலக் கேள்வு நிலையங்கள்" அல்லது "உள்நாட்டு ஆயம் தீர்ந்தல் சாலை" என்பது—

(அ) சுங்கக் கட்டுப்பாட்டின் கீழான பொருட்களை அவை கொள்கலனிலிருந்து வெளியிலெடுக்கப்பட்டு அழிக்கப்பட்ட பின்னர் அல்லது கொள்கலனுள் அவை அடைக்கப்படும்போது களஞ்சியப்படுத்துவதற்கும்,

(ஆ) அதனுள் பொருட்களைக் கொண்டுள்ள கொள்கலன்களினை களஞ்சியப்படுத்துவதற்கு ; அத்துடன்

(இ) வெற்றுக் கொள்கலன்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு ; சுங்கச் சேகரிப்பாளரினால் குறித்து நியமிக்கப்பட்ட ஒரு இடம் எனப் பொருள்படும்.

"சுங்கமனை" என்பது சுங்க அலுவல்களின் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏதேனும் இடம் எனப் பொருள்படும்.

(2) "உடைமையாளர்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைப் புகுத்துவதன்மூலம் :—

"துறை அல்லது துறைமுகம்" ஒரு சுங்க விமான நிலையத்தையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

(3) "கப்பல்" என்னும் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் "கப்பல் அல்லது கலம்" என்பது ஒவ்வொரு விவரணத்தின் கப்பல் அல்லது கலம் எனப் பொருள்படுவதுடன் வானூர்தி ஒன்றையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

(4) "கப்பல் அல்லது கலம்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

"கப்பலில் வைத்திருத்தல்" அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஓரினச் சொற்றொடர்களுடனும் வானூர்தியினுள் பொருட்களை ஏற்றுதலையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(5) "உண்மைப் பெறுமதி" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :

"இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சட்டமுறையாக அல்லது வேறுவகையாக இறக்குமதி செய்யப்பட்டதாயிருப்பினும் அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக "பெறுமதி" என்பது அட்டவணை உ என்னும் அட்டவணையின் பிரகாரம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொருட்களின் வழமையான விலையெனப் பொருள்படும்."

82. முதன்மைச் சட்டவாக்கம், பின்வருவனவற்றை இறுதியில் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. புதிய அட்டவணைகளைச் சேர்த்தல்.

அட்டவணை உ—பிரிவு 51

1. இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்களின் பெறுமதி, வழமையான விலையாதல் வேண்டும். அதாவது 2.7 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான ஒவ்வொருவருடன் சார்பில்லாதவர்களான வாங்குபவர் ஒருவருக்கும் விற்பவர் ஒருவருக்குமிடையில் திறந்த சந்தையில் விற்பனையின்போது இறக்குமதி நேரத்தில் அவை பெறுகின்ற விலையாகும்.

2. இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்களின் வழமையான விலை பின்வரும் எடுகோள்கள் மீது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

2.1 பொருட்கள் இலங்கையில் துறைமுகத்தில் அல்லது அறிமுகம் செய்யப்பட்ட இடத்தில் பொருட்கள் ஒப்படைக்கப்பட்ட அதாவது பொருட்கள் எந்த முதல் கடற்துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் இறக்கப்படுகின்றதோ அந்த முதற் கடற்றுறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் அல்லது ஏனைய விடயங்களில் சுங்க அலுவலரினால் அவை முதலில் கையாளப்படும் இடம் என்ற ;

2.2 துறைமுகத்தில் அல்லது அறிமுக இடத்தில் பொருட்களின் விற்பனைக்கும் ஒப்படைப்பிற்குமான இடைநேர் ஆகுசெலவுகள், அறவிடுகள், செலவுகள் எல்லாவற்றையும் விற்பனையாளர் ஏற்கவேண்டும். எனவே அவை வழமையான விலையில் சேர்க்கப்படவேண்டும்.

2.3 2 2 ஆம் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட ஆகு செலவுகள, அறவீடுகள், செலவுகள் பிறவற்றுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகிறது :—

2.3.1. இலங்கைக்குக் கொண்டுவருதல் கேள்வு.

2.3.2. காப்புறுதி.

2.3.3 தரகு.

2.3.4. கொள்வனவு தொடர்பில் தரகுக் கலி.

2.3.5. காவற்றுறைக் கட்டணங்கள் புறநீங்கலாக இலங்கையினுட் செல்லும் அறிமுகத்திற்கு இடைநேர் ஆவணங்களை இலங்கைக்கு வெளியே வரைவதிலான ஆகுசெலவு, அறவீடுகள், செலவுகள் ;

2.3.6. விலக்களிக்கப்பட்ட அல்லது மீளளிப்பின் மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டிருந்த அல்லது அளிக்கப்படவுள்ள பொருட்கள் தவிர்ந்த பொருட்களுக்கு இலங்கைக்கு வெளியே ஏற்புடைய தான திர்வைகளும் வரிகளும் ;

2.3.7. சுங்கத்தை விதிக்கும் நோக்கத்திற்கென வேறான சாமான்களாகக் கருதப்படுகின்ற சாமான்கள் தவிர்ந்த கொள்கலன்களின் ஆகு செலவு, தொழில், பொருள், அல்லது வேறுவகையாக பொதியாக்கலின் ஆகுசெலவு ;

2.3.8. ஏற்றல் அறவீடுகள்.

2.4 இலங்கையில் ஏற்புடையதான எல்லாத் திர்வைகளையும் வேறு விதிப்பனவுகளையும் வாங்குபவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் ;

2.5. பெறுமதியிடப்பட வேண்டிய அளவின் ஒரு விற்பனையாக விற்பனை உள்ளது.

2.6. பெறுமதி மதிப்பிடலுக்கான நேரம், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான இறக்குமதி நேரமாதல் வேண்டும்.

2.7. ஒவ்வொருவருடன் சார்பில்லாதவர்களான, விற்பனையாளரையும் திறந்த சந்தையில் வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையேயுள்ள விற்பனையானது பின்வரும் விடயங்களை முன் வைக்கின்றது.

2.7.1. விலை மாத்திரமே முற்றாகப் பொருட்படுத்தப்படும் விடயமாகும்;

2.7.2. விற்பனையால் உருவாக்கப்பட்ட தொடர்பு தவிர, விற்பனையாளருக்கு அல்லது அவருடன் தொழிலில் சேர்ந்த எவரேனும் ஆளுக்கும் விற்பனையாளருக்கு அல்லது அவருடன் தொழிலில் சேர்ந்த எவரேனும் ஆளுக்குமிடையிலான ஏதேனும் வர்த்தக நிதி அல்லது வேறு தொடர்பினால் விலை செல்வாக்குப் பெறவில்லை என்பதாகும்.

2.7.3. விற்பனையாளருக்கு அல்லது அவருடன் தொழிலில் சேர்ந்த எவரேனும் ஆளுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் பின்னரான மீளவிற்பனையின் வரும்படியின் பகுதி வேறு கையுதிர்த்தல் பொருட்களின் பயன் சேரமாட்டாது.

2.7.4. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்களில் ஒருவர் மற்றவரின் தொழிலில் அல்லது ஆதனத்தில் ஏதேனும் அக்கறை வைத்திருப்பின் அல்லது இருவரும் ஏதேனும் தொழிலில் அல்லது ஆதனத்தில் பொது அக்கறை வைத்திருப்பின் அல்லது எவரேனும் மூன்றாம் ஆள் இருவரின் தொழில் அல்லது ஆதனத்தில் ஓர் அக்கறையை வைத்திருப்பின் இரு ஆட்களும் ஒவ்வொருவரும் மற்றவரின் தொழிலில் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

2.8. பொருட்கள் பெறுமதியிடப்படும்போது: அவை—

2.8.1. ஏதேனும் ஆக்க உரிமையளிக்கப்பட்ட புத்தாக்கத்தின் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதென்று அல்லது ஏதேனும் பாதுகாக்கப்பட்ட வடிவம் ஏற்புடையதாகவிருக்கின்ற பொருட்களாக இருக்கின்றனவாகும்; அல்லது

2.8.2. வெளிநாட்டு வியாபாரக் குறி ஒன்றின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டவையாகும். ஆக்க உரிமையைப் பாதுகாக்கப்பட்ட வடிவத்தை அல்லது வியாபாரக் குறியைப் பயன்படுத்தும் உரிமையின் பெறுமதி வழமையான விலையில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

இக்காப்பு வாசகம் பதிப்புரிமை அல்லது ஏதேனும் வேறு அறிவியல் அல்லது கைத்தொழில் ஆதன உரிமைகள் விடயத்திலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆயின் அமைச்சரானவர் இலங்கையில் ஓர் ஆளினால் உரிமைகள் வைத்திருக்கப்படுமிடத்து நாட்டின் பொருளாதாரத் தேவையின் நலன்கருதி அத்தகைய பெறுமதியினை கட்டளைமூலம் தவிர்த்து விடலாம்.

2.8.3. உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்டனவையாகும் என்பதுடன் வெளிநாட்டு வியாபாரக் குறி ஒன்றின்கீழ் விற்கப்படவேண்டியவை அல்லது வேறு வகையில் கையுதிர்க்கப்பட வேண்டியவை அல்லது பயன்படுத்தப்பட வேண்டியவையாகும். வழமையான விலை பொருட்கள் தொடர்பான வியாபாரக் குறியைப் பயன்படுத்தும் உரிமையின் பெறுமதியை உள்ளடக்குதல் வேண்டும்.

2.9. வியாபாரக் குறியொன்று—

(அ) பெறுமதியிடப்பட வேண்டிய பொருட்கள் எவரால் வளர்க்கப்பட்டதோ, ஆக்கப்பட்டதோ உற்பத்தி செய்யப்பட்டதோ, விற்பனைக்குக் கொடுக்கப்பட்டதோ அல்லது வேறு வகையில் இலங்கைக்கு வெளியே வேறு வகையில் கையாளப்பட்டதோ அத்தகைய எவரேனும் ஆளின்; அல்லது

(ஆ) மேலே (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுடன் தொழிலில் சேர்ந்திருக்கும் எவரேனும் ஆளின்

அல்லது

(இ) மேலே (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுடன் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தினால் எந்த ஆளின், குறிமீதான உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த ஆளின்,

குறியாக அது இருப்பின் அது வெளிநாட்டு வியாபாரக் குறியாகக் கருதப்படுதல் வேண்டும்.

**3.** செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான விலை, மேலே 1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான வழமையான விலைக்கு பெறுமதியிடல் நேரத்தில் விலை நேரொத்திருந்தால் சுங்க நோக்கங்களுக்காக பெறுமதியாக ஏற்றுக்கொள்ளப்படலாம். அத்துடன் வழமையான விலை எந்தச் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டதோ, அந்தச் சூழ்நிலைகளைக் கவனத்திலெடுத்தல் அவசியமாயின் விலை சரிப்படுத்தப்படுகிறது.

அட்டவணை எ

சுங்கமனை முகவர்களுக்கான உரிமத்தின் விதிகளும் நிபந்தனைகளும்.

(1) சுங்கமனை முகவர் ஒருவராக உரிமம் பெற்ற ஒவ்வோர் ஆளும் சுங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(2) சுங்கமனை முகவர் ஒருவராக உரிமம் பெற்ற ஒவ்வோர் ஆளும் சுங்கம் தொடர்பான சட்டத்துடனும் பயில்வுகளுடனும் பழக்கப்பட்டவராதல் வேண்டும்.

(3) "சுங்கமனை முகவராக" உரிமம் பெற்ற ஒவ்வோர் ஆளும் தலைமைச் சுங்கச் சேகரிப்பாளர் தீர்மானிக்கக்கூடிய காசாக பிணை அல்லது சேகரிப்பாளர் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு பிணை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறுக்கென அவர் மீது விதிக்கப்படக் கூடியவாறான தண்டங்களும் இழப்பிக்கச் செய்தல் உட்பட எல்லாக் கட்டணங்களின் கொடுப்பனவிற்கெனக் கொடுத்தல் வேண்டும்.

பதவிப் பெயர்களின் மாற்றம்.

83. இச்சட்டம் ஆரம்பமான தேதியிலிருந்து இதற்கான I ஆம் அட்டவணையிலுள்ள I ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் பதவிப் பெயருக்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், கடிதப் போக்குவரத்தில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அட்டவணைக்கான II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்ட பதவிப்பெயர் பதலீடு செய்யப்பட வேண்டும்.

அட்டவணை

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| பிரதம சுங்கச் சேகரிப்பாளர்கள் | ... | சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி |
| சுங்கப் பிரதிச் செயலாளர் | ... | சுங்கப் பணிப்பாளர் |
| மேலதிக இறக்குமதிக் கணிப்பாளர் | ... | சுங்கப் பிரதிப் பணிப்பாளர் |
| உதவிச் சேகரிப்பாளர் | ... | சுங்க உதவிப் பணிப்பாளர் |
| உப சேகரிப்பாளர் | ... | சுங்க அத்தியட்சகர் |
| சுங்க அலுவலர் தரம்—I, II | . | உதவி அத்தியட்சகர் தரம் I தரம் II |
| சுங்கப்பகுதி காவலர் சுங்கப் பகுதி கணிப்பாளர் தேருநர்—பெண்கள் | ... | சுங்கப் பரிசோதகர் தரம்—I |
| காவலர் | ... | சுங்கப் பரிசோதகர் தரம்—II |

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட சாமான்கள், இறக்குமதித் தீர்வைக்கு உரித்துடையமை.

84. அரச கூட்டுத்தாபனமொன்றின் பயனுக்கான அல்லது சேவைக்கான அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் பயனுக்காக அல்லது சேவைக்காக முறியில்லாது கொள்வனவு செய்யப்பட்ட அனுப்புபொருள் சாமான்கள் ஒவ்வொன்றும் அத்தகைய அரச கூட்டுத்தாபனத்தைத் தாபிக்கும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் இறக்குமதித் தீர்வைக் கொடுப்பனவிற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

| நிரை I பொருட்கள் | நிரை II அளவு | நிரை III தண்டம் |
|---|---|---|
| தங்க நாணயம் பொன் வெள்ளிக்கட்டி அத்துடன் நகை உட்படத் தங்கம் | 50 கிராம்களும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 100 கிராம்களுக்குக்குறைவானவை. | ஓராண்டிற்குக் குறையாததும் இரு ஆண்டுகளுக்கு விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற்தண்டனை. |
| | 100 கிராம்களும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 500 கிராம்களுக்குக் குறைவானவை. | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| | 500 கிராம்களும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் ஆயிரம் கிராம்களுக்குக் குறைவானவை. | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| | 1000 கிராம்களும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 3000 கிராம்களுக்கு குறை வானவை. | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| | 3000 கிராம்களும் அதற்கு மேலும். | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கும் ஆதனத்தின் பறிமுதலுக்கும். |
| வெளிநாட்டு நாணயம் அல்லது இரத்தினக் கற்கள். | இலங்கை ரூபாவில் 15,000க்குச் சமமானதும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 30,000 விற்குக் குறைந்தவையும். | ஓராண்டுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனை. |
| | இலங்கை ரூபாவில் 30,000 ற்குச் சமமானதும் அதற்கு மேற்பட்டவையும் 1,50,000 ற்குக் குறைந்தவையும். | இரு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | இலங்கை ரூபாவில் 1,50,000 ற்குச் சமமானதும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 300,000 விற்குக் குறைந்தவையும். | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | இலங்கை ரூபாவில் 300,000 ற்குச் சமமானதும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் பத்து இலட்சம் ரூபாவிற்குக் குறைந்தவையும். | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | இலங்கை ரூபாவில் பத்து இலட்சத்திற்குச் சமமானவையும் அதற்கு மேற்பட்டவையும். | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கும் ஆதனத்தில் பறிமுதலும். |
| பின்னப்பட்ட ஆடை, புடவை, கம்பளம், பிணைக்கப்பட்ட நார் புடவைகள் அல்லது இதுபோன்ற பிணைக்கப்பட்ட நூல் புடவைகள். | 300 மீட்டர்களும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 600 மீட்டர்களுக்குக் குறைவாக. | ஓராண்டிற்கு குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனை. |

| நிரை I<br>பொருட்கள் | நிரை II<br>அளவு | நிரை III<br>தண்டம் |
|---|---|---|
| | 600 மீட்டர்களும் அதற்கு மேற்பட்ட.. வையும் ஆனல் 3000 மீட்டர்களுக்குக் குறைவாக. .. | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவையுமான காலமொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | 3000 மீட்டர்களும் அதற்கு மேற்பட்டவையும். ஆனல் 6000 மீட்டர்களுக்குக் குறைவாக. | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | 6,000 மீட்டர்களும் அதற்கு மேற் .. பட்டவையும் ஆனல் 20000 மீட்டர்களுக்குக் குறைவாக. | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| | 20,000 மீட்டர்களும் அதற்கு மேற் .. பட்டவையும். | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனையும் ஆதனத்தைப் பறிமுதல் செய்தலும். |
| (கம்பளம், பிணைக்கப்பட்ட .. நார், புடவைகள், மென்பட்டு அல்லது வேறு வலை ஆடைகளும் பின்னல்களும்) ஏதேனும் ஆடைவகை உடையினல் ஆக்கப்பட்ட உடைச் சாமான்களும் பின்னப்பட்ட அல்லது கொழுக்கிய பின்னப்பட்ட பண்டங்களும். | 300 எண்ணிக்கைகளும் அதற்கு .. மேற்பட்டவையும் ஆனல் 600 எண்ணிக்கைகளுக்குக் குறைவாக. | ஓராண்டிற்குக் குறையாததும் இரண்டாண்டுகளை விஞ்சாததுமான காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | 600 எண்ணிக்கைகளும் அதற்கு .. மேற்பட்டவையும் ஆனல் 3,000 எண்ணிக்கைகளுக்குக் குறைவாக. | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவையுமான காலமொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 3000 எண்ணிக்கைகளும் அதற்கு .. மேற்பட்டவையும் ஆனல், 6,000 எண்ணிக்கைகளுக்குக் குறைவாக. | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | 6000 எண்ணிக்கைகளும் அதற்கு .. மேற்பட்டவையும் ஆனல் 20000 எண்ணிக்கைகளுக்குக் குறைவாக. | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளுக்கு விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | 20,000 எண்ணிக்கைகளும் அதற்கு.. மேற்பட்டவையும். | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனையும் ஆதனத்தைப்பறிமுதல் செய்தலும். |
| மின்சக்தி, இலத்திரனியல் பொருட்கள். | 20 கூறுகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 30 கூறுகளுக்குக் குறைந்தவையும். | ஓராண்டுக்குக் குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| | 30 கூறுகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனல் 50 கூறுகளுக்குக் குறைந்தவையும் | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை |

| நிரை I பொருட்கள் | நிரை II அளவு | நிரை III தண்டம் |
|---|---|---|
| | 50 கூறுகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 100 கூறுகளுக்குக் குறைந்தவையும் | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கும் இருவகையில் ஒருவகை மறியற் தண்டனைக்கு. |
| | 100 கூறுகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 500 கூறுகளுக்குக் குறைந்தவையும் | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| | 500 கூறுகளும் அதற்கு மேற்பட்டவையும். | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலத்திற்கு இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை |
| எல்லா விவரணங்களையுமுடைய படைக்கலம் | 2 எண்ணிக்கைகளும் அவற்றிற்கு மேற்பட்டவையும் ஆனால் 4 எண்ணிக்கைகளுக்கு குறைவானவை | ஓராண்டிற்குக் குறையாததும் இரண்டாண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 4 எண்ணிக்கைகளும் அவற்றிற்கு மேற்பட்டவையும் ஆனால் 6 எண்ணிக்கைகளுக்குக் குறைவானவை | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் 5 ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 6 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 10 எண்ணிக்கைகளுக்குக் குறைவானவை | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | பத்து எண்ணிக்கைகளும் அவற்றிற்கு மேற் பட்டவையும் ஆனால் 15 எண்ணிக்கைகளுக்குக் குறைந்தவை | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 15 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும். | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத இருவகையில் ஒருவகை மறியற் தண்டனை. |
| வெடிப்பொருள்வகை (எறிபடைகளும் வெடிக்குமியல்புடையவையும் உட்பட) | 2 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 5 எண்ணிக்கைகளுக்குக் குறைந்தவை | ஓராண்டிற்குக் குறையாததும் இரு ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை. |
| | 5 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 10 எண்ணிக்கைகளுக்குக் குறையானவை | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 10 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 15 எண்ணிக்கைகளுக்குக் குறைவான குறைவானவை | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 15 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும் ஆனால் 20 எண்ணிக்கைகளுக்குக் குறைவானவை | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |
| | 20 எண்ணிக்கைகளும் அதற்கு மேற்பட்டவையும் | பதினைந்து ஆண்டுகளுக்கு குறையாத ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற் தண்டனை |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம் கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.